# இருபெண்கள் உட்பட 7 பேர் சுடப்பட்டு மரணம்

Registered as a Newspaper in Sri Lanka

ஈழமுரசு

குரல் 2 24-3-1985 ஞாயிற்றுக்கிழமை (பங்குனி 11- றஜப்-01) முழக்கம் 48

## பண்ணை சம்பவம்; மூன்று சடலம் ஆஸ்பத்திரியிலிருந்து கடத்தல்!

பண்ணைச் சந்தியில் நேற்றுக் காலை நடைபெற்ற சம்பவமொன்றில், பாதுகாப்புப் படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தினால் ஏழு பேர் ஸ்தலத்திலேயே மரணமானார்கள். இவர்களில் இருவர் போக்குவரத்துச் சபை பஸ்ஸில் பிரயாணம் செய்த பெண்கள் என அடையாளம் காணப் பட்டுள்ளனர். மரணமான எழுவரின் சடலங்களும் நேற்று மாலை 4-30 மணியளவில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் கையளிக்கப்பட்டன. ஐந்து மணிக்குச் சற்றுப்பின்னர் ஆஸ்பத்திரி சவக்காலைக்குள் நுழைந்த சிலர் அங்கிருந்த ஏழு சடலங்களில் குறிப்பிட்ட மூன்றைக் கடத்திச் சென்றுள்ளனர். நேற்றுக்காலை 9 மணியளவில் வானென்றில் பண்ணைச் சந்தியில் வந்தவர்கள், திடீரென வாகனங்களைக் கண்டுவிட்டு திருப்பிச் செல்ல முனைந்தபோது வான் கடலுக்குள் பாய்ந்ததாகவும், அனேகம் பேரும் தப்பிச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது அவ்வேளையில் அப்பாதையால் போக்குவரத்துச் சபை பஸ் ஒன்று பிரயாணிகளுடன் –8 ஆம் பக்கம் பார்க்க

★ தமிழ்ப் பகுதிகளை இணைத்த மாநில சுயாட்சி அமைப்பு

★ சிங்கள மக்கள் குடியேற்றத்தை தடை செய்தல்

★ பாக்கு நீரிணையில் இலங்கை-இந்திய கூட்டு ரோந்து

# ஜே. ஆருடன் பண்டாரி இன்று முதலாவது சந்திப்பு நடத்துவார்!

## குறிப்பிட்ட காலத்துக்கு இரு பகுதியினரும் ஆயுதங்களை கீழே போட கேட்கப்படலாம்

(புதுடில்லி)

பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியின் விசேஷ தூதுவராக இன்று கொழும்பு வரும் இந்திய வெளியுறவு அமைச்சின் செயலாளர் ரமேஷ் பண்டாரி, ஜனாதிபதி ஜெயவர்த்தனவை இன்றே சந்தித்து, இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பான பேச்சுவார்த்தைகளை நடத்துவாரென்று நேற்றிரவு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று தினங்கள் இங்கு தங்கியிருக்கும் திரு பண்டாரி மூன்று அம்சங்களின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை நடத்தலாமென்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

குறிப்பிட்ட சில காலப் பகுதிக்கு அரச படையினரும், தமிழ்த் தீவிரவாதிகளும் தங்கள் ஆயுதங்களைக்கீழேபோட்டு விட்டு, அரசியல்ரீதியான தீர்வு காணவிழைய வேண்டுமென்ற கோட்பாட்டில் பேச்சுவார்த்தைகள் இடம்பெறுமென்று தெரிவிக்கப்பட்டது.

சர்வகட்சி மாநாட்டின் இணைப்பு 'சி' யில் தெரிவிக்கப்பட்ட தமிழ்ப் பிரதேசங்கள் இணைந்த மாநில சுயாட்சியை இரு பகுதி மக்களையும் இணக்கம் காணச் செய்து பெறமுனைவது;

—8 ஆம் பக்கம் பார்க்க

### அமெரிக்க தீர்மானம்

இலங்கையின் சகல இனங்களைச் சேர்ந்த சகல கட்சிகளும் ஒன்றிணைந்து இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண முன்வரவேண்டுமென்ற தீர்மானம் அமெரிக்காவின் இரு

— 8-ஆம் பக்கம் பார்க்க

## ரூபவாஹினி காட்டிய இருபது தீவிரவாதிகள்

அண்மையில் வடபகுதியில் ஆயுதப்படையினர் தேடுதல் நடாத்தியபோது கண்டு பிடிக்கப்பட்ட இருபது தீவிரவாதிகளின் புகைப்படங்களை அரசாங்கம் நேற்று பகிரங்கப் படுத்தியுள்ளது.

பதின்மூன்றுக்கும் முப்பதுக்கும் இடைப்பட்ட வயதுடைய இவர்கள் புலிப்படையைச் சேர்ந்தவர்களென அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்களைப் பற்றிய தகவல்களை அருகாமையிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கோ அல்லது பாது

—8 ஆம் பக்கம் பார்க்க

### பகிஷ்கரிப்பர்

ஏப்ரல் 13ம் திகதி பாராளு மன்றத்தில் பிரிட்டிஷ் பிரதமர் மார்க்கிரட் தட்சர் உரை நிகழ்த்தும்போது பாராளுமன்

—8 ஆம் பக்கம் பார்க்க

## விசேஷ லீவிலுள்ள அறுபது வானொலி ஊழியர் தினமும் கையொப்பமிட உத்தரவு

(கொழும்பு)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலிருந்து விசேஷ லீவில் அனுப்பப்பட்ட அறுபது தமிழ் ஊழியர்களும் இனிமேல் தினமும் தத்தம் வேலைப் பகுதிக்குச் சென்று காலையில் கையொப்பமிட வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளனர்.

கடந்த டிசம்பர் மாதத்தில் பாதுகாப்புக் காரணத்தால் இவர்கள் விசேஷ லீவில் அனுப்பப்பட்டனர். பலரும் தமது சொந்த இடங்களுக்குச் சென்று விட்டனர் ஆனாலும் மாதா மாதம் இவர்களுக்கு முழுச்சம்பளம் வழங்கப்பட்டு வருகிறது.

இனிமேல் இந்த ஊழியர்கள் தினமும் காலையில் தமது வேலைப் பகுதிக்குச் சென்று ஒப்பமிட்டுவிட்டு செல்ல வேண்டுமென்று, தனித்தனிக் கடிதமூலம் பணிக்கப்பட்டுள்ளனர்.

விசேஷ லீவில் அனுப்பப்

— 8-ஆம் பக்கம் பார்க்க

### 9 சடலங்கள்

மட்டுநகர் ஆஸ்பத்திரியில் ஒன்பது சடலங்கள் நேற்று ஒப்படைக்கப்பட்டன. இதில் மூன்று பெண்களின் சடலமாகும்.

## ஐ. தேசிய கட்சிக்கு எதிராக புதிய கட்சி உதயமானது

ஐக்கிய தேசியக்கட்சியின்முக்கியஸ்தர்களாக இருந்தபலர் காலஞ்சென்ற பிரதமர்கள் டி. எஸ். சேனநாயக்காவும், டட்லி சேனநாயக்காவும் வசித்த பொரளை 'வுட்லண்ட்ஸில்' ஒன்று கூடி ஐக்கிய தேசியக கட்சிக்கு எதிராக புதிய கட்சி ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

அஸ்கிரிய பீடாதிபதியை காப்பாளராகவும், முன்னாள் பிரதம நீதியரசர் நெவில் சமரக்கூன உதவிக் காப்பாளராகவும் கொண்டு உருவாக்கப்பட்ட இக் கடசியின் பெயர்

–8-ஆம் பக்கம் பார்க்க

### பாதிக்கப்பட்டோர் கூடி முடிவு :

## ஹற்றன்நாஷனல் வங்கி மீது உடனடி சட்ட நடவடிக்கை!

யாழ்ப்பாணம் ஹற்றன் நாஷனல் வங்கிக் கிளையில் நடைபெற்ற 'லொக்கர்'கொள்ளையினால் தமது உடைமைகளை இழந்தவர்கள் நேற்று மாலை ஒன்று கூடி, தமது இழப்புக்கு நஷ்டஈடு பெறுவதற்காக வங்கி மீது சட்ட நடவடிக்கை எடுப்பதென்று ஏகமனதாகத் தீர்மானித்தனர்.

வர்த்தகப் பிரமுகரும், பிரபல சமூக சேவையாளருமான திரு. ஆர். ஜே. குணரத்தினம்

–8 ஆம் பக்கம் பார்க்க

## ஆசிரிய நேர்முகப் பரீட்சைக்குக் கடைசி சந்தர்ப்பம்: ஏப்ரல் 2, 3-ல் ஆஜராகலாம்!

கடந்த டிசம்பர், ஜனவரி மாதங்களில் நடைபெற்ற ஆசிரிய தெரிவுக்கான நேர்முகப் பரீட்சைக்கு சமுகம் கொடுக்காத சுமார் 175 பேருக்கு கல்விச் சேவை ஆணைக்குழு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் வழங்க முன்வந்துள்ளது.

இறுதிச் சந்தர்ப்பமாக இவர்கள் ஏப்ரல் 2ம்,3ம் திகதிகளில், பத்தரமுல்லை 'இசுறுபாய' கட்டடத்தில் அமைந்துள்ள கல்விச் சேவை ஆணைக்குழுவின் புதிய அலுவலகத்தில நேர்முகப் பரீட்சைக்கு ஆஜராக வேண்டுமென குழுவின் உறுப்பினர் சட்டத்தரணி கே. ஜெயக்குமார் நேற்று 'ஈழமுரசு'க்குத் தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட 175 பேருக்கும் நேர்முகப்பரீட்சைக்கான கடிதங்கள் கடந்த வெள்ளிக்கிழமை அனுப்பப்பட்டதாகத் தெரிவித்த அவர், கடிதங்கள் கிடைப்பதில் தாமதம் ஏற்படின்,பரீட்சார்த்திகள்தத்தம் பகுதி கல்விப்பணிப்பாளரைச் சந்தித்து, பட்டியலில் உள்ள வாறு கடிதம் பெற்றுவரலாம் என்றும் தெரிவித்தார்.

— 8 ஆம் பக்கம் பார்க்க

### இன்றைய கூட்டம்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள பிரஜைகள் குழுக்களின் இணைப்புக் குழுவின் கூட்டம் இன்று காலை யாழ். மாநகர சபை அறையில நடைபெறவுள்ளது.

## மட்டக்களப்புப் பகுதியில் இடம்பெற்ற கொள்ளைகள்

(மட்டுநகர்)

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் நேற்று முன்தினம் நடைபெற்ற பல்வேறு கொள்ளைச் சம்பவங்கள் பற்றியும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அட்டாளைச்சேனை தபால் நிலையத்திலிருந்து மூவாயிரம் ரூபா பணமும், முத்திரைகளும், அலவாங்கால் கதவு உடைத்துத் திறக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டன.

அட்டாளைச்சேனை பலநோக்

—8 ஆம் பக்கம் பார்க்க

national weekly

வார மலர் விலை ரூபா இரண்டு

## புங்குடுதீவுப் பகுதியில்

# ஆசிரியர் பற்றுக் குறையால் அதிபர்கள் திண்டாட்டம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவில் உள்ள பாடசாலைகள் அனைத்திலும் ஆசிரியர் பற்றுக் குறை தலைதூக்கியுள்ளது ஸ்ரீகணேச மகா வித்தியாலயம் ஸ்ரீசண்முகநாதன் வித்தியாலயம் ஸ்ரீசித்திவிநாயகர் மகாவித்தியாலயம், ஸ்ரீஇராஜேஸ்வரி வித்தியாலயம் ஆகியவற்றில் ஆசிரியர்கள் பற்றுக்குறையினால் கல்விப் போதனைகள் பெரிதும் பாதிக்கப்படுவதாகப் பெற்றோர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். சங்கீதம், விஞ்ஞானம், கணிதம், தமிழ் ஆகியாம் பாடங்களைக் கற்பதற்குக்கூட ஆசிரியர்கள் இல்லையாம்.

இக்குறைபாடுகளைப் போக்குமாறு யாழ். கல்விப் பணிப்பாளரிடம் பலமுறை முறையிட்ட போதிலும் பயன் எதுவுமே கிட்டவில்லையெனப் பெற்றோர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். ஆசிரியர்கள் பற்றுக் குறையினால் நேரசூசிப்படி பாடங்களை நடத்தமுடியாதிருப்பதாகப் பாடசாலை அதிபர்கள் கூறுகிறார்கள்.

## நலன்புரிக் கழகக்கூட்டம்

(சித்தன்கேணி)

யாழ். கல்வித்திணைக்கள நலன்புரிக் கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் ஏப்பிரல் மாதம் பதினேழாந் திகதி வியாழக்கிழமை முற்பகல் பத்து மணிக்கு யாழ்-நல்லூர் ஸ்தான பாடசாலையில் நிர்வாக அதிகாரி திரு. கே. சந்திரராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்பொதுக் கூட்டத்தில் செயற்குழு அங்கத்தவர்கள் தெரிவு விசேட நிகழ்ச்சியாக நடைபெறும். இத்தெரிவிற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்படி கழகச் செயலாளர் திரு இ. தவராசா மேற்கொண்டுள்ளார்.

# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

சுண்டுக்குளி, கச்சேரி – நல்லூர் வீதியில், இரண்டு பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: பவளா நந்தகுமாரன், சட்டத்தரணி, 45, கச்சேரி-நல்லூர் வீதி, சுண்டுக்குளி.

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை - நவாலி றோட்டில் - மானிப்பாய் வீதிச் சந்திக்கருகாமையில் ஐந்து பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: பி. கனகரத்தினம், 37 (71), கச்சேரி-நல்லூர் வீதி. யாழ்ப்பாணம்.

கண்டி றோட்டிலிருந்து அரியாலை ஸ்ரேசன் றோட் 1ம் ஒழுங்கை (நாவலடி) 35 பரப்பு தென்னங் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: T. யோகராசா, 847, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

### காணவில்லை

அகஸ்ரின் மேரிகலூசியா 187/1 கடற்கரை வீதி, பாஷையூர் என்பவரது அடையாள அட்டையைக் காணவில்லை, கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழமுரசு காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

### மாபெரும் ஏலவிற்பனை

தினசரி காலை 9 மணி முதல் இம்மாதம் 31ம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரையும் பலவித பொருட்கள் ஏராளமானவைகள் பகிரங்க ஏலத்தில் விற்பனையாகும். எப்பொருளானாலும் வாங்கவும் விற்கவும் தனமும் வாருங்கள்: ஏல விற்பனை நிலையம், கோப்பாய்.

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## பல்கலைக்கழக அனுமதி

(ஊர்காவற்றுறை)

கடந்த ஆவணி மாதம் இடம் பெற்ற க. பொ. த உயர் பரீட்சையில் சித்தியடைந்து, வளாக அனுமதிக்கு ஆகக் குறைந்த தேவைகளைப்பூர்த்தி செய்த அபேட்சகர்களிடமிருந்து, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் செயலாளரினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி தகுதிவாய்ந்த மாணவர்கள் செயலாளரிடமிருந்து விதித்துரைக்கப்பட்ட படிவத்தையும், கைநூலையும் பெற்று ஏப்ரல் 12-ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்க வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளனர்.

## சைவசமய பாடப்பரீட்சை

(புங்குடுதீவு)

யாழ். சைவ பரிபாலன சபையினர் கடந்த வருட இறுதியில் நடத்திய அகில இலங்கை சைவசமய பாடப் பரீட்சை முடிவுகள் தற்போது வெளியாகியுள்ளன. இப்பரீட்சையில் சித்திபெற்றவர்களுக்கான சான்றிதழ்கள், பரிசில்கள் ஆகியன எதிர்வரும் மே மாதத்தில் வழங்கப்படுமெனப் பரீட்சைச் செயலாளர் சைவப் புலவர் வ. கந்தசாமி தெரிவித்தார்.

இவ்வாண்டிற்கான பரீட்சைக்குரிய விண்ணப்பங்கள் எதிர்வரும் ஜூன் மாதம் 30ம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படுமென்றும் நவம்பர் மாதம் முதலாம் திகதி பரீட்சை நிகழுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.




※ அச்சுவேலி சிவகுருநாதன் சரஸ்வதி தம்பதிகளின் மகன் பிரசாத் இன்று தனது மூன்றாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

※ புத்தூர் கிழக்கு கந்தசாமி கமலநாயகி தம்பதிகளின் மகள் தர்ஷிகா இன்று தனது மூன்றாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

※ ஆனைப்பந்தி நடேசன் காசிப்பிள்ளை தம்பதிகளின் மகள் காயத்திரி இன்று தனது பதினோராவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

※ மட்டுவில் கணேசமூர்த்தி தம்பதிகளின் மகள் ஜெகந்தினி இன்று தனது ஏழாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

※ கரணவாய் தெற்கு ஆறுமுகம் அனுஷியா தம்பதிகளின் மகன் ஆதனஸ் இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

※ புலோலி மேற்கு ஆத்தியடி, பாலகிருஷ்ணன் நாகேஸ்வரி தம்பதிகளின் மகள் தாஷினி இன்று தனது ஒன்பதாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

※ வல்வெட்டித்துறை கொட்டுவளவு க. நவரட்ணராஜா பரமேஸ்வரி தம்பதிகளின் புதல்வி அபிராமி இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

※ யாழ்ப்பாணம் பாஷையூர் யேசுதாஸ் தவமலர் தம்பதிகளின் செல்வப் புதல்வி ஜெதாசினி (செல்வா) இன்று தனது ஐந்தாவது பிறந்த நாளை மிக விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

※ பாஷையூர் சேயோன் தம்பதிகளின் புதல்வன் சென் ஜோன் ஸ்ரீபன் பீற்றர் தனது இரண்டாவது பிறந்த தினத்தை இன்று மிகவும் விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

## தந்தையை அணுக முடியாதா?

தமிழ்த்தேசிய இனத்தின் ஏக தலைவரான தந்தை செல்வநாயகம் அவர்களுடைய 86வது பிறந்த தினம் எதிர்வரும் 31ம் திகதியாகும் அன்னாரது 8வது மரண தினம் எதிர்வரும் ஏப்பிரல் 26ம் திகதியாகும்.

தந்தை செல்வாவின் 80வது பிறந்த தினத்தையொட்டி அவரைக் கௌரவிப்பதற்காக அவரது மறைவின் பின் தந்தை செல்வா அறங்காவல் குழுவினர் அவரது அகவையைப் பிரதிபலிப்பதாக 80 அடி உயரமுடையதாக ஒரு நினைவுத் தூபியை எழுப்பினர்.

காலப்போக்கில் தந்தை செல்வா நினைவாலயமாக மாறவிருக்கும் மேற்படி தூபியின் மருங்கில்தான் தந்தை செல்வாவின் நினைவு தினங்களில் மலர் அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சிகள் நடைபெற்று வந்தன.

பத்திரிகைச் செய்தியின்படி பாதுகாப்புக் காரணங்களால் தந்தை செல்வா தூபி நிறுவப்பட்டுள்ள இடம் பாதுகாப்புப் பிரதேசமாகத் தடைசெய்யப்பட்டு முட்கம்பி வேலியால் அடைக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினால் வழமைப் பிரகாரம் அங்கு மலரஞ்சலி செலுத்தி தந்தையின் பிறந்ததின அனுட்டானங்களை நடத்த முடியாத இக்கட்டு பெரியாரின் ஆதரவாளர்களைக் குறுக்கிட்டுள்ளது.

பெரியவருக்கு பதிலாக அன்னாரது ஞாபகச் சின்னமாக எழுப்பப்பட்ட நினைவுத்தூபி முட்கம்பி வேலியால் யாரும் அணுகமுடியாதவாறு அடைக்கப்பட்டிருப்பதில் வியப்பில்லை.

● தர்மன்


**குகன் ஸ்ரூடியோ இடமாற்றம்**

பருத்தித்துறை குகன் ஸ்ரூடியோ சிவன் கோவில் வடக்கு தெணி றோட் 4 ஆம் வீட்டில் இயங்குகிறது.

**கலர் பிலிம் சுருள்களை PROCESSING PRINTING செய்வதற்கு**

**கொழும்பு ஸ்ரூடியோ**

**வெளிநாடு பிரயாணமா?**

ஜேர்மன், பிரான்ஸ், சுவிஸ், கொலன்ட் செல்பவர்கட்கு பாஸ்போட், ரிக்கற், கொழும்பில் தங்குமிட வசதி, விமான நிலைய ஒழுங்குகள் யாவும் உடன் செய்துகொடுக்கப்படும்.

விபரங்களுக்கு:
JAFFNA TECHNICAL INSTITUTE
ஸ்ரான்லி வீதி, (றெயில்வே கடவை அருகாமை)
யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

திருமதி பாக்கியநாதன் அமிர்த காலமாகிவிட்டார். அன்னார் திரு. தம்பையா காலஞ்சென்ற திருமதி சோதிப்பிள்ளை தம்பையாவின் அருமை மகளும் திரு. பொ. பாக்கியநாதன், கரைச்சி தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச்சங்க தலைவரின் அன்பு மனைவியும், திருமதி யோகாம்பிகை சிவானந்தராசா (ஆசிரியை, கனகராயன்குளம் மகாவித்தியாலயம்), ரி. துரைராசா, ரி. பொன்னுத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரி. புஸ்பவதி, பி. பிலோமினா திருமதி மதியாபரணம் செல்லம்மா, திருமதி இ. கனகம்மா (செட்டிகுளம்), கண்ணையா, தாமோதரம்பிள்ளை (நயினாதீவு), சண்முகம் தனபாலன் ஆகியோரின் மைத்துனியும், சிவயோகராஜ், சிவாஜினி, யோகானந்தராஜ், அமுதானந்தராஜ், நவந்தினி ஆகியோரின் அன்புச் சிறியதாயும், திரு. சிவலிங்கம் தம்பதிகளின் பெருமகளும், திரு மு. பொன்னையா அவர்களின் மருமகளுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் ஸ்கந்தபுரம் பொதுமயானத்தில் 24-3-85 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி அறியத்தருகின்றோம்.


**யாழ். மக்களுக்கோர் அரிய சந்தர்ப்பம்**

**CROSS TECHNICAL SERVICE**


குறொஸ் ரெக்னிகல் சேர்விஸ்

Stage II, Model Market, No. 5, 1st Floor,
Bus Stand Centre Road, Jaffna.

★ மேற்படி எமது ஸ்தாபனத்தில் புதுவருடத்தையொட்டி விசேட கழிவுடன் மின்சார உபகரணங்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

★ பாவனையாளர்களே உங்கள் பாவனைக்குகந்த மின்சார அடுப்புகள், சலவை இயந்திரம், குளிர்சாதனப் பெட்டி, ரெலிவிஷன், ரெலிவிஷன் ஸ்ராண்ட் (T. V. STAND) உட்பட சமயலறை உபகரணங்கள் யாவற்றையும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளுங்கள்.

குறிப்பு: பொருட்கள் யாவும் Duty Free Shop இல் வாங்கும் விலைக்குக் கொடுக்கப்படும்.




# நவீன குறைப்பிரசவங்களை கவிதை என அழைக்கலாமா?

கவிதை! "கவிதை"! என்று சொல்லுகிறீர்களே! இப்போதெல்லாம் கவிதை கவிதை என்று எழுதுகின்றீர்களே! அதை எழுதுவதற்கென ஏதும் வரையறைகள் உண்டா? இல்லை கண்டபாட்டில் மனத்தில் வந்தவாறெல்லாம் எழுதலாமா? இதற்கும் வசனத்திற்கும் ஏதேனும் வேறுபாடு இருக்கிறதா? இத்தகைய பல கேள்விகள் இன்றைய 'கவிதை' என்று எழுதப்பட்டு வெளிவருபவற்றை வாசிக்கும் வேளைகளில் மனதின் கண்முன் எழுகின்றன.

தமிழ் இலக்கிய வரலாற்றில் சிறப்பான இடத்தை இந்தக் கவிதை என்ற பண்டம் எடுத்துக் கொண்டுள்ளதென்பது சாதாரண இரசிகர் முதல் விமர்சகர்கள் வரை ஏற்றுக் கொள்ளப்பட்ட பிரத்தியட்சமான உண்மை. ஆனால் பாரதிக்குப் பின்னர்தான தமிழில் கவிதை சமூக மக்களுடன் உறவாடத் தொடங்கியது. அவ்விதம் அது சாமான்ய மக்களுடன் உறவாடத் தொடங்கியதற்கு காரணம் அன்றைய காலத் தேவையும், தேவையின் முக்கியத்துவ முமேயாகும். அவ்வேளை கவிதைக்கே உரித்தான பண்டைப் பண்பொன்றினை பாரதி நிராகரித்துள்ளதாகத் தெரியவில்லை. அதுதான் யாப்பு.

தான் கற்ற ஆங்கிலக்கல்வியின் பயனாக எழுத முயற்சித்த பரிசோதனையாகிய வசன கவிதையில் கூட ஈற்றில் யாப்பை மீறிப்போக இயலாத நிலையைக் காணக் கூடியதாக உள்ளது. சொற்சேர்க்கையின் ஒலி ஓசைக் கோட்டையை விட்டுப் பாரதியால் வெளியேற முடியாமலிருந்ததை நன்கு அவதானித்தால் புலனாகும் ஏன் கம்பனுடைய கவிதைகளில் கூட ஓசை பொருளுக்கு ஏவல் செய்யும் அற்புதமும் கவனிக்கற்பாலன இந்த ஓசையின் அடி அத்திவாரமே யாப்புத் தான். ''பாட்டைப் படிக்கும் போது பாவதாளத்தின் (ரித்ம்) வேகம் இன்னதென்று தெரிய வரும். இதைத்தான் ஆங்கிலத்தில் 'போர்ம்' (Form) உருவம் என்று சொல்லுவார்கள். இந்த உருவம் இருந்தால் தன் கவி, உருவம் என்பது விஷயம், உணர்ச்சி, சொல், தாளம் எல்லாம் சேர்ந்து பிறக்கிற ஒரு அற்புத தத்துவம்'' என்று டி. கே. சி. சிதம்பரநாத முதலியார் "கவி

**கவிமாறன்**

யும் உருவமும்', என்ற கட்டுரையில் யாப்பின் அவசியத்தைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவற்றிலிருந்து தமிழ்க் கவிதைக்கென ஒருபாரம்பரியமும் தர்க்க சாஸ்திரமுறையும் உண்டென்பதும் அவற்றிலிருந்து விடுபட்டு இயங்கமுடியாதென்பதும் வெளிப்படை. ஆனால் இன்று நிலைமை அவ்வாறல்ல. கவிதைக்கு ஓசை ஒழுங்கோ, யாப்போ, வடிவமோ தேவையற்றதெனக்கூறி நிராகரிக்கத் தலைப்பட்டுள்ளனர். இன்னொரு சாரார் அதனை அங்கீகரிக்கத் தலைப்பட்டுள்ளனர். சி. சு. செல்லப்பா, க. நா. சு., சி. மணி, ந. பிச்சமூர்த்தி, வைத்தீஸ்வரன், தாமு சிவராமு முதலியோர் இத்துறையிலே முனைப்பாகக் காணப்பட்டனர். இதனைத் தொடர்ந்து 'வானம்பாடி' குழுவினர், மேத்தா, காமராசன், மீரா முதலியோர் எழுதி வருகின்றனர். ஈழத்திலும் யாப்பை நிராகரித்து எழுதுவோர் பலர் தோன்றலாயினர். இப்படி எழுதுவதும் கவிதை தான் என்று வக்காலத்து வாங்கவும் சிலர் தலைப்பட்டனர். மேலைத்தேய கட்டங்களுடாகக் கவிதையைக் கணிக்கத் தலைப்பட்ட இவர்கள் அடிப்படையான, சில வரன்முறையான படிமுறைவளர்ச்சியடைந்த தமிழ்க் கவிதைத் துறையைத் தமது ஆற்றுமை காரணமாகவும் திறமைக் குறைவு, சோம்பல் தனம், கவிதை பற்றிய குறைந்த பட்ச ஞானமின்மை, நுணுகி நோக்கும் நுண்மாண் நுழைபுலமின்மை முதலியன காரணமாகவும் இவ்வித அரை வேக்காட்டுக் குறைப்பிரசவங்களை ஜனித்து விட அதற்குச் சப்பைக் கட்டுப் பாடுவோரும் ஈடு கொடுக்க முன்வந்தனர்.

இவர்களுடைய இந்தப் போக்கு சிந்திப்பதற்குக் கவிதையை மரபு ரீதியாக எழுதியவர்களும் காரணர்களாக இருந்தனர் என்பது உண்மையே. வெறும் மரத்துப் போன அந்த யாப்புவடிவத்தை மட்டும் வைத்துக் கொண்டு செய்த ஆஷாடபூதித்தனமே இத்தகைய புதுக்கவிதை சுப்பிகள் மலியக் காரணமாயின.

> மரபுக் கவிதை, புதுக்கவிதை என்ற வாதப் பிரதிவாதங்கள் நீண்டகாலமாகவே நடைபெற்று வருகின்றன. இக்கட்டுரையின் கருத்துக்கள் கட்டுரையாசிரியரின் சொந்தக் கருத்துக்கள். வாசகர் கருத்துக்களும் வரவேற்கப்படும்.

இது புதுக்கவிதைக்காரர்களுக்கு அரியதோர் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது.

சரி, மேலைத்தேய மொழிகளில் இத்தகைய இலக்கிய வடிவம் ஒன்று தோன்றி உள்ளது அது ஏன் எங்கள் மொழியிலும் இருக்கக்கூடாது என்று சிலர் கேட்கின்றார்கள். யாரும் மறுப்பதற்கில்லை. அதனை சிறுகதை, நாவல் போலப் புதிய இலக்கியமாக ஏற்றுக் கொள்ளலாம். ஏன் பண்டுதொட்டுப் படிமுறையானதோர் முறையில் கணித நுணுக்க, ஓசை நெறி ரீதியிலாய் வளர்ச்சியடைந்து எத்தகைய கலா சிருஷ்டிகளுக்கும் நெகிழ்ச்சியடைந்து கொடுக்கக் கூடியதாய் விளங்கும் கவிதையுடன் போட்டுப் ''புதுக்கவிதை'' என்று குழப்பிக் கொள்ள வேண்டும்? ''யாப்பை மீறியுள்ளோம்'' என்று குரல் கொடுக்கும் இவர்கள் குறைந்தபட்சமேனும் யாப்பைச் சரிவரத் தெரிந்து கொள்ளாதவர்களாசரிவரத் தெரிந்து கொண்டிருக்கும் ஓரிருவர் கூட அந்த வரையறைகளை அனுசரித்து தமது மொழியாற்றலை வெளிக்கொணர முடியாதவர்களாகவே, மொழியாற்றல் செம்மையற்ற, சொல்லாட்சி குறைந்த நுனிப்புல் மேய்ந்தவர்களாகவே காணப்படுகின்றனர்.

இன்னொருசாரார் அருட்டுணர்வில் உதித்த தெளிவற்ற கலப்போசைகளை சிறு பிள்ளைப் பிதற்றல் போல் கையாளுகின்றனர். பலவேறுபட்ட யாப்புக் கோலங்களைப்புகளையும்; யாப்பை மீறுவதாகவும், நிராகரிப்பதாகவும் கூறி மார்தட்டும் இவர்கள் ஏன் கையாள வேண்டும். உண்மையில் அவர்கள் சிறுவயதில் மனனம் செய்த இலக்கியச் செய்யுள்களின் ஓசைத்தாக்கங்கள் அவர்களை இப்படைப்புக்கு ஏவிய காரணிகளாகும். அன்றியும் யாப்பைச் சரிவரத் தெரியாதவர்கள் எப்படி மீறமுடியும்.

உயிர் செயற்பட உடல் எத்துணை முக்கியமானதோ அவ்வாறு ஒரு கவிதையின் இயக்கத்துக்கு யாப்பு அது அத்தியாவசியமானது. நன்றாகச் சைக்கிள் ஓடத்தெரிந்த ஒருவரால்தான கைவிட்டு விட்டு சைக்கிள் ஓட முடியும்- அதுவும் தொடர்ந்து கைவிட்டு விட்டு ஓட முடியாது. இதேபோலத்தான் யாப்பை ஓரளவு அதாவது குறைந்த பட்சமாவது கையாளத் தெரிந்த ஒருவராலேதான் மீறவும் முடியும்.

எவ்வளவுதான் பல பேர் கூடிக் கூச்சல் போட்டாலும் கட்டுக்கோப்பற்ற கவிதை என்ற பேரில் வருபவை நிலைக்கப்போவதுமில்லை. இருட்டடிப்புச் செய்யப்பட்டு வரும் உண்மையான சிறப்பான கட்டுக் கோப்பான கவிதைகள் மறையப்போவதுமில்லை. விரிய முளை முளை எப்போதும் மேல்நோக்கித்தான் எழும். அதே போல அழுத்தந் திருத்தமான ஒழுங்கான யாப்புக் கமைய எழுதப்பட்ட கவிதைகள் சுடச் சுடரும் பொன் போல் ஒளிவிடும்.

வரப்பு கட்டி செய்யப்படும் வயலிலேதான நல்ல விளைச்சலையும் அறுவடையையும் எதிர்பார்க்கலாம். அவ்வாறே யாப்புக் கட்டுப்பாட்டுக்குள் நின்று தேவைகளை உணர்ந்து எழுதப்படும் கவிதைகளே காலவெள்ளத்தால் அடித்துச் செல்லப்படாமல் சான்றாண்மை மிக்க அமர இலக்கியமாகத் திகழும், சமுதாயத்திற்கு வேண்டிய பங்களிப்பையும் நல்கும். ஆரோக்கியமானதாகவும் அமையும்.

## நான் தொலைந்தேன் நீ ஓடித்தப்பித்துவிடு!

எழுத்தாளராக உலகப் பிரசித்தி வாய்க்கப்பெற்றவர், காலஞ்சென்ற சேர் ஏர்னெஸ்ற் ஹெமிங்வே. அது மாத்திரமன்றி, தமது எண்ணிறந்த, வெற்றிகரமாக வெளியிடப்பெற்ற, புத்தகங்கள் வாயிலாகப் பெரும் பணம் படைத்தவராகவும் சிறப்புற்று வாழ்ந்த நவீன நூலாசிரியர் அவர். ''நெருக்கடியிலும் உயர்மாண்பு'' என்ற தத்துவம் அவர் மனதிற்கு மிக உவப்பானது. அந்த வகையில், ''ஆத்தா, எக்கணமும் மரணம உனக்கு!'' எனும மிரட்டலின முனனிலையிலும துணிச்சலின் உச்சகட்டத்திற் திகழ்ந்த எமது மனிதன ஒரு வனினை கதையை இங்கு தருகிறோம்.

அவர் ஓர் அனுமதேயம். தீவின வடக்கில் எங்கோ, ஒரு சிறு தேநீர்க் கடை வைத்திருந்தார். அவருடைய மகனை அரசின் பகையாள் எனச் சந்தேகித்து, அரச படையினர் பிடித்துக் கொண்டு போய்விட்டார்கள். மனக் கிலேசம், அதாவது பெரும் மனக்கவலை என்றவுடு, எவரது மனச்சாந்தியையும் சின்னாபின்னமாக்கிச் சீரழித்து விடவல்லது. துரப்பாக்கிய சம்பவமொன்றின விளைவாக, அவருடைய கடையினை விற்பனை ஆட்கள் சுவீகரிக்கமிற்றிப படுமுகாலை செய்யப்பட்டுவிட்டனர். அவர் கூட, ''பணயக் கைதி'' ஆக்கப்பட்டு, ''தேடப்பட்ட'' ஆண்ணுமொர் ஆளைக் காட்டிக் கொடுக்குமபடி பயங்கரமாகப் பயமுறுத்தப்பட்டார்.

சட்டப்படி, ஒருவரது குற்றம் நிரூபிக்கப்படுமுன, ஒருவர் எவ்வளவுதான பலமாகச் சந்தேகிக்கப்பட்டாலுங்கூட, அவரது தவறை வசாபனை செய்யும் எதுவொரு நியாயாதிக்க மன்றமோ, நீதி அதிகாரியோ அவர் தமது கடசியைய எடுத்துரைக்க வாய்ப்பு அளித்து வருபவர். கடசியை எடுத்துரைக்கும உரிமை, நீதியின கருவூலம் என, அகிலமே எங்கனும் ஏற்றுக்கொள்ளப்பெற்றுருக்கிறது. ஆங்கிலநாட்டு ''லோட்ட சான்செலர்'' பதவி வகித்த மேலவர் ஒரு பிரபு குறிப்பிட்டவாறு, ''நீதி வழங்கவும் வேண்டிய நீதி வழங்குவது வெட்டவெளிச்சமாக, ஐயத்துற்கு இடமின்றித் தெரியவும் வேண்டும்''. இவ்வாறு இழைக்கப்படும் சில செயல்களினால், தனித்துவ மேன்மை மிக்க இச்சட்டக் கோட்பாடு கேலிக்கு இடமாகியுள்ளது இதுவும் இதுபோன்ற பிற கோட்பாடுகளும் நூற்கல்வியாளர்களின் அக்கறைக்கு மட்டும் உரியனவாகத் தற்போது உள்ளன.

சற்றேனும் மனிதாபிமானம் அற்றவாறாக நடத்தப்பட்ட அவர், கொல்லப்படப் போவதாகப் பயமுறுத்தவும்பட்டார். பின்னர் ''காவலுடன்'' கூட்டிச்செல்லப்பட்ட அவர், ''தேடப்பட்ட'' இன்னுமொருவருடைய வீட்டைக் காண்பிக்குமபடி பணிக்கப்பட்டார். அவ்வாறு செய்யத் தவறினால் அவர்கள் அவரை நிச்சயம் கொன்றுவிடுவார்கள். அது அவருக்கு நன்றாக விளங்கியது இருந்தாலும், அந்த வீர நெஞ்சமுடைய மனிதர், ''தேடப்பட்ட'' ஆளுக்குஒருஎச்சரிக்கை கொடுக்கத் துணிந்துவிட்டார். பின்வருமாறு சத்தமிட்டு அந்த ஆளை அவர் எச்சரித்தார்: ''என்னைப் பிடித்து வைத்திருக்கிறார்கள நான் தொலைந்தேன.

**ஆர். சி. தவராஜா**

நீ இப்போதே ஓடித் தப்பித்து விடு!''

எச்சரிக்கை காதில் விழுந்த அந்த ஆள, ஓடித் தப்பித்துக் கொண்டார் ஆனால எச்சரித்த அஞ்சா நெஞ்சமுடைத்தவனின் தாயன்னுயிர் காக்கத் தன்னுயிரைத் தரணமாகத் மதிக்கத் தீர்மானித்த வீரர், தனது உயிரிழந்தார், வீதியிலே அலைந்துதிரியும் நாய் சுடப்படுவதுபோல, அக்கணமே அவர் அங்குவைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

''இறப்பதற்கு முன் கோழைகள் பலதடவை இறப்பதுண்டு. வீரனோ, சாவின வாடை தனைடுவதை ஒரேயொரு முறைதான உணர்வான.'' என, ஆங்கில நாடகாசிரியர்களுள் முதன்மைவகிக்கும் வில்லியம் ஷேக்ஸ்பியர் எழுதியது வீணேபாகவில்லை. ஆக்கத நாயகன ஒரு சிறிய சிற்றுண்டிச்சாலைக்காரராக இருந்திருக்கலாம், ஆனால், அவரது வாழ்வின் முடிவு ஒரு வீர மரணம ஆயிற்று என்பது திண்ணம. ''மனிதகுலத்தின் மாபெரும் தலைவர்கள பண்பார்ந்த உலகின் மகுடங்களுள உயர் குறுளுமாகப் போற்றப்படுவர்.'' என்பதில பொருந்த உண்மைதான எவ்வளவு!

தமிழ் மணம் என்றால் யாழ் புகையிலை மணம்!

### தமிழ் மணம் என்றால் யாழ் புகையிலை மணம்!

''தமிழ் மணம் கமழவேண்டும்'' என்று மணிரங்கு ராகத்தில் கீர்த்தனங்கள் பாடுகிறார்களே. உண்மையில் தமிழுக்கு என்று ஒரு தனி மணம் உண்டா என்று கேட்டால் கட்டாயம் உண்டு என்று நான் தயங்காது சொல்வேன். தமிழ் மணம் என்பது புகையிலைச் சுருட்டுப் புகைக்குப்போது உண்டாகும் மணமாகவே இருக்க வேண்டும். யாழ்ப்பாணத் தமிழர்கள் இருக்கிறார்களே, அவர்களுடைய வாய்கள் சிறிது நேரம் கூடச் சும்மா இருப்பதில்லை ஒன்று அவை அழகிய தமிழில் கதைத்துக் கொண்டிருக்கும், அல்லது நறுமணச்சுருட்டைப் புகைத்துக் கொண்டிருக்கும். அவர்கள் பேசும் தமிழில் இனிய புகைமணம் கமழும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

(கல்கியின் ''இலங்கை விஜயம்'' என்ற கட்டுரையில் இருந்து.)

## சென்ற வாரத் தொடர்

# உலி ஈரம் பச்சை

**கே. டானியல்**

விடிந்து விட்ட பின்பு...

புத்தம் புதியதான பென்னம் பெரிய கார்கள் மூன்று வந்து சேர்ந்தன.

அவைகளிலிருந்து நவநாகரீக உடையில் பெண்கள் பலர் வந்து சேர்ந்தனர்.

நடுவயதினர்கள்—

இளம் குமரிகள்—

சின்னஞ்சிறு பெண்கள்—

இவர்களுக்குப் பின்னால் டிறக் வண்டி ஒன்று பெட்டியுடன் வந்து சேர்ந்தது.

அதில்,

அரிசிச் சாக்குகள்—

காய்பிஞ்சு முடிச்சுக்கள்—

சட்டிபானை, கிடாரங்கள்—

இப்படிப் பல வந்து சேர்ந்தன.

ஒரு தடவை வந்தவர்கள் எல்லோரும் அகதிகள் ஜீவன்களைச் சுற்றிப்பார்த்துத் தங்கள் பச்சாதாப உணர்வினை வெளிக்காட்டிக் கொண்டனர்.

பாடசாலையின் பின்புற ஒதுக்கில் அடுப்புக்கள் வைத்து சமையல் வேலைகள் தொடங்கப்பட்டு விட்டன.

வந்த நாகரீகப் பெண்கள் உடைகளை ஒதுக்கி அள்ளிக் கட்டிக்கொண்டு சமையல் வேலைகளில் ஈடுபடத் தொடங்கிவிட்டனர்.

நடுவயதைச் சிறிது தாண்டிய அல்லது எட்டிப்பார்த்துக் கொண்டிருந்த போந்து பொலிந்த ஒருத்தி தலைமைதாங்கினாள். பச்சை, மஞ்சள், வெள்ளை நிறங்களுடன் கூடிய ஒருசேலையைச் சுற்றியிருந்தாள்.

அகதிகள் கூட்டத்தில் ஒன்றிரண்டு பெண்கள் உதவிக்கு வந்தனர். ஆனாலும் அந்தத் தலைச்சப் பெண் அதைத் தடுத்து விட்டாள்.

''ஏன் மாமி, அவர்களும் சேர்ந்து செய்தால் சாப்பாடு கெதியில் முடியும்தானே!'' இப்படி ஒருத்தி ஆங்கிலத்தில் கேட்டாள்.

''உனக்கு ஒன்றும் தெரியாது. நீ பேசாமல் இரு, அவள் என்ன சாதியோ யார் கண்டார்?'' இப்படி அந்தத் தலைச்சி ஆங்கிலத்தில் பதில் சொன்னாள்.

''அதுக்கென்ன சின்னம்மா நாங்கள் தின்னப்போறோமோ? அவைதானே தின்னப்போகினம்!'' இப்படி ஒரு சின்னப் பெண் ஆங்கிலத்தில் கீச்சிட்டாள்.

''ஆர் தின்டாலும், எங்கடை சட்டிபானையிலை அவளவை பத்தெ டவிடுகிறதோ? அது எங்களுக்கு மரியாதையோ?'' இப்படித் தலைச்சி அவளையே ஆங்கிலத்தில் கேள்வி கேட்டாள்.

இதற்குப்பின் இந்தப் பிரச்சினை பற்றி எந்தப்பேச்சுமில்லை.

அவர்களின் பலபேர்களின் முகங்களில ஒட்டியிருந்த பௌடர்கள், சொண்டுச் சாயங்கள் அடுப்பு வெக்கையின் வெயர்வையால் நனைந்து வடிந்தன.

அகதிகளுக்காக அவர்கள் இப்படி அவஸ்தைப்படுகிறார்கள்; தாறுமாறுகச் சமையல் செய்கிறார்கள். பலகாலமாக மறக்கப்பட்ட செயல்பாடுகள் அவைகள்! ஆனாலும் இப்போது தமிழுக்காக அவர்கள் தங்களையே தியாகம் செய்கிறார்கள்!

ஒரு மாதிரியாகச் சமையல் வேலைகள் ஒப்பேறிவிட்டன.

மணி இரண்டுக்கு மேல் சென்றுவிட்டது. அகதிகள் சபை இருத்தப்பட்டு, வாழைத் தடல்கள் போடப்பட்டு, உணவு பரிமாற்றமும் முடிய மூன்றரைக்கு மேலாகிவிட்டது.

புத்தம் புதிய-சின்னஞ்சிறிய கார் ஒன்று பறந்தோடி வந்தது.

அதிலிருந்து உணவுப் பார்சல்கள் இருபது வரை இறக்கப்பட்டன.

வந்திருந்த பெண்கள் சிறிசுகள் உட்பட அந்தப் பார்சல்கள் எண்ணிக்கையில் அதிகம் தான். மிகுதியானவை அங்கு இருந்த தொண்டர்களையும் உத்தியோகத்தரையும் சணக்கெடுத்தபோது எண்ணிக்கை சரியாகத் தான் இருந்தது.

ஐந்து மைலுக்கப்பால் உள்ள ஒரு பிரமுகர் வீட்டிலிருந்து இவர்களுக்கு மட்டுமென அவைகள் வந்திருந்தன. அவைகளைப் பக்குவமாக ஒப்படைத்து விட்டு அந்தச் சின்னஞ்சிறிய கார் பறந்தோடி விட்டது.

ஐயா வீட்டு விசேஷ உணவு பொரியல் கருகல்களுடன் இதமாக இருந்தது.

ஒவ்வொரு பார்சலுக்குள்ளும் ஒவ்வொரு முட்டை குந்தி இருக்கத் தவறவில்லை.

மாலை வந்தது.

தங்கள திருக்கரங்களைக் குவித்து மிகவும் வினயமாக அகதுகளுக்கு வணக்கம் செலுதது விட்டு அந்தத திருக்கூடடம் புறபபட்டு விட்டது.

தொண்டர்கள் மட்டும் நின்றனர்.

இருட்டி விட்டது.

மறுபடியும் வெளிச்சங்கள் ஏற்றப்பட்டன.

மறுபடியும் உத்தியோகத்தர்கள் டியூட்டி மாறிக் கொண்டனர்.

தொண்டர்களையும் டியூட்டி மாற்றி விடப் புதியவர்கள் வந்தனர்.

மறுபடியும் சீட்டாட்டம்!

மறு நாளும் ஆயிற்று.

திட்டமிட்டபடி தவறாமல் எட்டுமணிக்கு முன்னமேயே காலை உணவு வந்து சேர்ந்துவிட்டது.

தலைக்கு எட்டுப்பத்து இடியும், அற்புதமான சாம்பாரும், பச்சை மிளகாய்ச்சம்பலும்!

பத்து மணிவரையில் பஸ் வண்டி ஒன்று பள்ளம் திட்டிகளில் ஏறி இறங்கி, சாய்ந்து நிமிர்ந்து வந்து சேர்ந்தது.

அதிலிருந்து ஐம்பதுக்கு மேற்பட்ட யுவன், யுவதிகள் இறங்கினர்.

அவர்கள் அத்தனை பேர்களும் சர்வ கலாசாலை மாணவ மாணவிகள்!

அவர்கள் பொட்டணிகளைச் சுமந்து வந்தனர். யாழ்ப்பாணப் பட்டணப்பகுதிக்குள் வீடு வீடாகத் திரிந்து சேகரித்த உடைகள் அவை.

அவர்களால் கொண்டுவரப்பட்ட சிறிய ரேடியோக்கள் பல அங்கு மிங்குமாக வைக்கப்பட்டன.

அகதிகளுக்காக அவர்கள் இவைகளை எடுத்துவந்தனர்.

ரேடியோக்கள் பாடத்தொடங்கின.

அற்புதமான பாட்டுக்கள்.

ஆண் பெண் ஜோடிக் குரல்கள்.

பூந்தோட்டங்களில், கடற்கரைகளில் பாடப்பட்டவையான பாட்டுக்கள்.

பூந்தோட்டங்களில் பட்சிசால ஓசைகளும், கடற்கரையின் அலை ஓசைகளும் பின்னணியாகப் பதிக்கப்பட்டவைகள்!

அகதிகளைக் கூட்டங் கூட்டமாகவும், அவர்களுள் அழகிகளைத் தனித்தனியாகவும், சிரிக்கவும், பாவனைகள் செய்யவும் வைத்துப் படங்களை எடுத்துக் கொண்டனர்.

அகதிகளில் சிறுவர் சிறுமியரையும், கிழடு கட்டைகளையும் கிணற்றடிக்குக் கூட்டிச் சென்று குளிப்பாட்டினர், கிணற்றடியை அமர்க்களப் படுத்தினர்; குளித்த நிலைமைகளிலும் சிலரைப் படங்களாக்கினர்.

கொண்டுவரப்பட்ட நாகரீக உடைகளை உடுக்க வைத்து வேண்டிய வேண்டிய விதங்களில் படங்களாக்கினர்.

அறுபது வயதுப் பாட்டி ஒருவளையும், அவள் கணவனான எழுபது வயதுத் தாத்தாவையும் வற்புறுத்தி, நாகரீக உடைகள் அணிவித்து, பௌடர்ப் பூச்சுக்கள் பூசி, கிழவியின் சொண்டுகளுக்குச் சாயத்தூள் தீட்டி இருவரையும் சேர்த்துச் சேர்த்துப் பல கோணங்களில் படங்களை ஆக்கிக் கொண்டனர்.

''இவைகளைச் செய்வதன் மூலம் துர்ப்பாக்கியமான சம்பவங்களை இவர்கள் மனதை விட்டுப் போக்கடித்துச் சமநிலைப் படுத்தலாம்!''

இந்த விதத்தில் ஒரு தத்துவ மாணவன் இவைகளுக்கான இலக்கணமும் சொன்னான்.

மணி பன்னிரண்டு வரை வந்துவிட்டபோது மீண்டும் பல வாகனங்கள் வந்து சேர்ந்தன.

அவைகள் அளவுகளில் பெரியவைகளாக இருந்தன.

ஒரு வாகனத்தில் வெள்ளை நிறத்திலான ஒரு ஜோடி கீழ்ப்புறத்தில் ஒரு பெட்டியின் சாயல் வர்ணங்களில் பதிக்கப்பட்டு. ''இதோ உங்கள் மேனிக்கு அழகுதரும் பவுடர்'' என்றும் அழகு தமிழில் பொறிக்கப்பட்டிருந்தது.

இன்னொரு வண்டியின் முன் பக்கத்தில் பாரதியின் படம் வரையப்பட்டிருந்தது. அதன் கீழ், ''வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும்'' என்ற எழுத்துக்களும், அதற்கும் கீழாக ''உணவு தயார்'' என்பதும் ஒரு முகவரியும் குறிக்கப்பட்டிருந்தது.

தொழில் அதிபர்களும், அவர்களின் விசுவாசத்துக்குரிய ஊழியர்களுமாகப் பலர் இறங்கினர்.

அவர்களுடன் சேர்ந்து வருகைதந்த உணவுப் பார்சல்கள் பவுத்திரமாக இறக்கப்பட்டன.

உள் மண்டபத்தை அவர்கள் சுற்றிவந்தனர்; எல்லோரிடமும் பேசினர்; அளவளாவினர். ஆறுதல் கூறி ஆசுவாசப் படுத்தினர்.

இன்று வேளையோடு நடுப்பகல் உணவு பரிமாறப் படத் தொடங்கிவிட்டது.

முதலாவது உணவுப் பொட்டணத்தைச் சமவேளையில் நான்கு தொழில் அதிபர்களும் பரிமாற மின்னல்கள் பல தெரிந்தன. பத்திரிகைக் கமராக்காரர்களின் வயிற்றுப் பசிக்கு இந்தத் தொழில அதிபர்கள் இரையாகிவிட்டனர்.



மதிய உணவு முடிந்தது.

அந்த அகதிகள் கூட்டத்துள் அழகிய இளம் பெண் ஒருத்தி இருந்தாள்.

## இரு வாரக் கதை

ஓராண்டுக்கு முன் தோட்டப்பகுதியில் தோட்டத்துரைமார் சேர்ந்து நடத்திய தோட்டக்கூலிகளின் அழகு ராணிப் போட்டியில் முதல் பரிசைப் பெற்றுக் கொண்டவள் அவள்.

இந்த விபரத்தைப் பவுடர் தொழிலதிபருக்குச் சொல்லிவிட்டது ஒரு கிழம்.

அப்பாடா!

பாடசாலைக்குப் பின்புறமாக அந்த அழகி அழைத்துச் செல்லப்பட்டாள். அங்கே செழிப்பாக மடல் விரித்து இருந்த குமரி கத்தாளைக்கு நடுக்கு நடுவே நிறுத்தப்பட்டாள். அவள் கரங்களில பவுடர் ரின்கள் அடுக்கப்பட்டன. அவள் அந்தக் சவர்க்காரக் கட்டிகளை ஆசையோடு பார்க்கும் பாவனையில் ஒருபடம்! அவளின் நீண்ட கூந்தல் முன்புறமாக விரிக்கப்பட்டு, அந்தக் கூந்தலோடு சோத்துப் பிடிக்க வைத்து ஒரு படம்! அவளின் கூந்தலை உச்சியில் அள்ளிச் சொருக வைத்து, அதன்மேல் அடுக்கிவைத்து ஒரு படம்! அவளின் கெண்டைக் கால் வரை பாவாடையை உயரத் தூக்கி அதிலே அவள் பவுடர் பூசுவது போல ஒரு படம்!

மற்றவர் என்ன விட்டாரா? அந்த அழகியை வள்ளுவர் படத்துக்கு முன்னால் விட்டு அவள் கையில் பாரதி நூல் ஒன்றைத்தான் கொடுப்பது போன்ற பாவனையில் ஒரு படத்தைப் பிடிப்பித்து விட்டார்.

அடுத்த அதிபர் என்ன லேசுப்பட்டவரா? அந்த அழகியை அறிஞரின் உருவப்படத்துக்கு நேராக அவளை நிற்க வைத்து பற்கள் தெரியச் சிரிப்பித்தபடி ஒரு படத்தைப் பிடித்து விட்டார்.

சோற்றுக் கடைக்காரருக்கும் ஆசை விடவில்லை. ஏதாவது ஒரு பார்சலை அவளிடம் கொடுத்துப்படமாக்க அவருக்கு முடியவில்லை. ஆனாலும் பாரதி படத்தைப் பக்கவாட்டில் அமையவைத்து அவளுடன் ஒரு படத்தை எடுத்துக்கொண்டார்.

பொழுது சரிந்து வந்தது.

தொழில அதிபர்களும் ஊழியர்களும விடை பெற்றுக் கொண்டு போய் விட்டனர்.

சர்வகலாசாலை மாணவிகள் இருவர் நாட்டுப் பாடல்கள் தெரிந்தவர்கள் யார் யார் என்பதை விசாரித்து அவர்களில் தேறியவர்களாக பத்துப் பேர்கள் வரை பக்கத்து மர ஒதுக்குக்கு அழைத்துச் சென்று உட்கார வைத்து ஒவ்வொருவரையும் கொண்டு நாட்டுப் பாடல்களைப் பாட வைத்து 'ரேப்' பில் பதிவு செய்து கொண்டிருந்தனர்.

அந்த மாணவிகள் இருவருக்கும் அந்த ஆண்டுதான் இறுதி ஆண்டு.

அவர்கள் நாட்டுப் பாடல் ஆய்வு நடத்துகிறார்கள்.

அது பற்றித்தான் அவர்களுக்கு 'தீசிஸ்' செய்வதில் ஆர்வம்.

ஒரு தாடிக்கார மாணவனும் மற்றும் மூவரும், வயதான பல ஆண்களை ஒதுக்குப்புறமாக அழைத்துச் சென்று தோட்டப் பகுதித் தொழிலாளர்களின் வாழ்க்கை முறைகளை அவர்களுக்கூடாகப் பிச்சுப் பிடுங்கிக் கொண்டிருந்தனர். அதைப்பற்றி இம்முறை ஒரு ஆய்வு நடத்தத்தான் அவர்கள் திட்டமிட்டிருக்க வேண்டும்!

இந்த விதங்களில் சகல மாணவ மாணவிகளும் அந்த அகதிகளை ஆங்காங்கே சேர்தது வைத்துப் பிய்த்துப் பிடுங்கிக்கொண்டே இருந்தார்கள்.

மாலைப்பொழுது வந்தது. அவர்கள் வந்த வாகனம் புறப்படுவதற்குத் தயாராகிநின்றது.

பிரியாவிடை சொல்லிக் கொண்டு எல்லோரும் புறப்பட்டு விட்டனர்.

—6-ஆம் பக்கம் பார்க்க

# இணையற்ற தமிழ் தொண்டர் ஈழகேசரி பொன்னையா

1930 ஆம் ஆண்டு தொடக்கம் 1958 ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாணத்தில் 'ஈழகேசரி' வாரப்பத்திரிகை தொடர்ந்து வெளிவந்து கொண்டிருந்தது. இந்த இருபத்தெட்டு ஆண்டு காலம் தமிழ் இலக்கிய வரலாற்றிலே ஈழகேசரிக் காலம் என அழைக்கப்படுகின்ற பெருமையை உடையது. ஈழத்துப் புலவர்களும், பண்டிதர்களும், அரசியற் பிரமுகர்களும், கலைஞர்களும், கவிஞர்களும் நவீன இலக்கிய கர்த்தாக்களும் இப்பத்திரிகையை வளம்படுத்தி வந்தனர். இப்பத்திரிகை தோன்றுவதற்கு மூலகர்த்தாவாக விளங்கியவர் குரும்பசிட்டியைச் சேர்ந்த நா. பொன்னையா அவர்கள். 'ஈழகேசரி' பொன்னையா என்றும் பொன்னையா வள்ளல் என்றும் சிறப்பித்துக் கூறப்படும் இவரின் தொண்டு பத்திரிகை நடத்துவதுடன் நின்று விடவில்லை.

இவரது தொண்டுகள் பன்முகப்பட்டவை; பத்திரிகை ஆசிரியர், புத்தகசாலை அதிபர், அச்சுக்கூட நிர்வாகி, புத்தக வெளியீட்டாளர், பதிப்பாசிரியர், சமூக சேவையாளர், கொடைவள்ளல், கிராம சங்கத்தலைவர், நல்ல கமக்காரன்- இப்படி இவர் தொண்டுகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

## இளமை வாழ்க்கை

ஈழகேசரி பொன்னையா அவர்களது இளமைக் காலம் அப்படியொன்றும் வசதியானதாக அமைந்திருக்கவில்லை. குரும்பசிட்டியில் ஒரு நல்ல கமக்காரக் குடும்பத்தில் திரு. பொன்னையா அவர்கள் பிறந்தார்கள். நாகமுத்தர் - தெய்வானைப்பிள்ளை என்னும் இருவருக்கும் கடைசிப்பிள்ளை இவர். நந்தன வருடம் ஆனி மாதம் 22ஆம் திகதி பிறந்த இவர் அவ்வூர் மகாதேவ வித்தியாசாலையில் ஐந்தாம் வகுப்பு வரை கல்வி பயின்றார். ஆத்திசூடி தொடக்கம் நீ,நூற்கொத்து அத்தனையும் மனப்பாடம்; நிகண்டில் ஒருபகுதி கணிதத்தில் வாழ்க்கைக்குத் தேவையான அளவு-இவ்வளவுதான் இவரது ஆரம்பப்படிப்பு.

படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டுத் தந்தையோடு கமத்தொழிலில் ஈடுபட்டார். ஏதாவதொரு புதிய தொழிலைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆசையினால் ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை அவர்களின் அச்சுக்கூடத்தில் அச்சுக்கோப்பாளராகப் பணிபுரிந்தார். பின்னர் கொழும்புக்குச் சென்று வியாபார ஸ்தலமொன்றில் சேர்ந்தார்.

(முல்லைமணி)

பின்னர் இலங்கையைவிட்டுப் பர்மாவுக்குச் சென்றார். பர்மா, மலாயா முதலிய இடங்களையெல்லாம் சுற்றிப் பார்த்த திரு. பொன்னையா இரங்கூன் பட்டினத்தில் தங்கினார். 1920 ஆம் ஆண்டில் இரங்கூனில் வெளிவந்து கொண்டிருந்த 'சுதேசமித்திரன்' பத்திரிகையில் உதவி ஆசிரியர் பதவி பெற்றார். மீண்டும் இலங்கைக்குத் திரும்பிய பொன்னையா அவர்கள் இங்கேயும் அச்சுக்கூடமொன்றிலே பணிபுரிந்தார்.

## கணேசையர் தொடர்பு

தமிழ் படிக்க ஆசை கொண்ட திரு. பொன்னையா அவர்கள் புன்னாலைக்கட்டுவன் வித்துவ சிரோன்மணி சி.கணேசையர் அவர்களிடம் பயின்று பிரவேச பண்டிதர் பரீட்சையில் சித்தியெய்தினார். இந்தத் தொடர்பு நீடித்தது தமிழன்னை செய்த தவப்பயனாகும். சொந்தத்தில் புத்தகசாலையும் அச்சுக்கூடமும் வைத்திருந்த பொன்னையா அவர்களின் தமிழ்ப் பணிகளில் முக்கியமானது கணேசையாவின் உரைகளைக் குறிப்புடன் தொல்காப்பியம் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் ஆகியவற்றைப் பதிப்பித்து வெளியிட்டமையாகும். இதுபற்றி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்கள்.

"கணேசையர்-பொன்னையா இருவர்களது சேர்க்கை அபூர்வமான சேர்க்கையாகும். கங்கையும் யமுனையும் சேர்ந்தது போலாகும். இந்தச் சேர்க்கை இருவருக்குமே நல்லதாயிற்று. கணேசையரது உரைவிளக்கக் குறிப்பு வெளிவந்து அவரது புகழை உச்சநிலையில் வைத்தது. திரு பொன்னையா அவர்களும் அருமையான தமிழ்த் தொண்டு செய்து நிலைபெற்ற புகழை எய்தினர்."

## ஈழகேசரி

"டொனமூர்த்திட்டம் நடைமுறைக்கு வருங்காலத்தில் (1930) இவர் ஈழகேசரியைத் தொடங்கியது இவரின் தீர்க்க தரிசனத்துக்கு ஒரு எடுத்துக் காட்டாக விளங்குகின்றது. டொனமூர்த்திட்டத்தின் கீழ்த்தான் இலங்கைக்குச் சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டது. கீழைத் தேசங்களுள் முதன் முதல் இவ்வுரிமையைப்பெற்ற நாடு இலங்கையே. இந்த வாக்குரிமையை மக்கள் சரியாகப் பயன்படுத்துவதற்கு அரசியல் அறிவு அவசியமாகும். இந்த அறிவைப் பத்திரிகை மூலம் பெறலாம். இருபத்தெட்டு வருடங்களாக அரசியல் துறையிலும் இலக்கியத் துறையிலும் ஈழகேசரி தமிழ் மக்களுக்கு அருந் தொண்டாற்றி வருகிறது. ஈழகேசரி ஈழநாட்டுக்கும் தமிழ் நாட்டுக்கும் பாலமாக அமைந்திருக்கிறது. தமிழ் மரபுக்குப் பங்கமேற்படாத முறையில் புதுமையைத் தழுவுவது இப்பத்திரிகையின் சிறந்த அம்சமாகும்'' என வைத்தீஸ்வர வித்தியாலயத்தின் அதிபராகவிருந்த ச.அம்பிகைபாகன் அவர்கள் குறிப்பிட்டுள்ளது இங்கு நினைவு கூரத்தக்கது.

''ஈழகேசரிப் பத்திரிகையைத் தொடங்கிய காலத்தில் பொன்னையா அவர்களது பொருளாதார பலம் மிகவும் அற்பமானது புத்தகசாலை, அச்சுக்கூடம் என்பவற்றைத் தொடங்கி ஆரம்ப நிலையிலேயே வைத்திருந்தார். அச்சியந்திரத்தைக் கூடக் கையால் சுழற்றியடிக்கும் நிலை. சம்பளங்கூட ஒழுங்காகக் கொடுக்க முடியாத இக்கட்டான நிலை. இந்த நிலையில் துணிவையே மூலதனமாகக் கொண்டு ஒரு தரமான வாரப்பத்திரிகையை வெளிக்கொணர்ந்த திரு பொன்னையா அவர்களினுடைய செயல் இமயமலையை ஏறிக்கடக்கும் சாதனை என்றுதான் சொல்ல வேண்டும்'' என இரசிகமணி கனக. செந்திநாதன் கூறுகின்றார்.

26-6-30 தொடக்கம் 30-3-51 வரையான காலத்தில் திரு. பொன்னையா அவர்கள் மேற்பார்வையிலும் பின்னர் ஏழுவருடங்கள் 1-6-58வரை பிறர் மேற்பார்வையிலுமாக 28 வருடங்கள் ஈழகேசரி பெருமையோடு வாழ்ந்து 'ஈழகேசரி காலம்' என்னும் பொற்காலத்தை நிறுவியுள்ளது. தனிப்பட்ட மனிதர் ஒருவர்-தமிழில்- இத்தனை வருடகாலம் ஒரு தரமான பத்திரிகையை நடாத்துவதென்பது அன்றும், இன்றும் நடக்கக்கூடியதன்று. அந்தச்சாதனையைப பொன்னையா அவர்கள் சாதித்தார்கள். அதனாலே தான் 'ஈழகேசரி பொன்னையா' என்று அவர் அழைக்கப்படுகின்றார்.

## புத்தக வெளியீடு

1926 இல் புத்தகசாலையை

—7-ஆம் பக்கம் பார்க்க

## நீடிக்கின்ற நிலைமை!

சட்டமும் ஒழுங்கும்
காப்பாற்றப் படுமாம்?
ஜனநாயகம்
ஜனித்த நாளிலிருந்து
இத்தனை
நீண்ட காலங்களாய்
குற்றம் செய்தவனை
அன்றி
அப்பாவிகளையே
குற்றவாளிகளாக
ஆக்கிக்
கொடுமைப்படுத்துகின்ற
நிலைமை
நீடிக்கிறது!

★ 'பூமணிமைந்தன்'

## மதியும் பிறையும்

## காலமும் பணியும்

தமிழ் இலக்கிய வரலாற்றில் பத்தொன்பதாம் நூற்றாண்டு ஒரு பொற்காலம். அச்சு எந்திரப் புரட்சியாலும், அதன் விளைவாலும் பல திருப்பங்களைத் தமிழ் இலக்கிய வரலாறு கண்டது. இதற்கெல்லாம் முழுமுதற் காரணமாக இருந்தவர் ஆறுமுக நாவலர் அவர்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இலக்கிய பாரம்பரியத்தின் பிதாமகன் ஆறுமுக நாவலர் என்பது வரலாற்றுண்மை.

நாவலருக்குப் பின்னர் இந்தப் பணிகளைச் செய்தவர்கள் இருவர். ஒருவர் காசிவாசி செந்திநாதையர்; மற்றவர் சி. வை. தாமோதரம்பிள்ளை. செந்திநாதையர் சைவப்பணியில் ஈடுபட்டார் தாமோதரம்பிள்ளை தமிழ்ப் பணியில் ஈடுபட்டார். தனியொருவரின் இருமுனைப் பெரும் பணியாக இருந்த கூறுகள் தனித்தனி கிளைகளாக இவர்கள் பணிகளில் இடம்பெற்றன.

செந்திநாதையர், தாமோதரம்பிள்ளை அவர்களுக்குப் பின்னர் மீண்டும் சைவத்தையும், தமிழையும் இணைத்துப் பணியாற்றும் வாய்ப்பு மேலும் ஓர் ஈழத்தவருக்கே கிடைத்தது; நாவலர் மாணாக்கர் பரம்பரையில் வந்த நல்லூர் தியாகராசப்பிள்ளை, சதாசிவப்பிள்ளை முதலியோரிடமும், சபாபதி நாவலர், சோமசுந்தர நாயக்கர் போன்றோரிடமும் கல்வி பயின்று நாவலர் பரம்பரைக்கு அணிகலனாக விளங்கினார். மேலைப் புலோலி சதாவதானம் நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள். நாவலர் பாரம்பரியத்தைக் கட்டிக் காக்கும் பொறுப்பு இவரைச் சார்ந்தது. அதுமட்டுமல்ல நாவலரின் பெயருக்கு இழுக்குக் கற்பிக்க காழ்ப்புற்றோர் நினைத்தபோது, நாவலரின் நற்பெயரைக் காக்கத் தயங்காது பாடுபட்டார்.



கதிரைவேலர் ஒருமுறை மதுரைத் தமிழ்ச் சங்கம் சென்றிருந்தார். அங்கு நாவலரை இழித்துக் கூறப்பட்டது. இதுபற்றி கதிரைவேலரின் அரிய மாணவருள் தலையாய திரு. வி. க. அவர்கள் கூறுவது நினைவு கூரத்தக்கது. "அவன் காராளரை மன்னர் பின்னர் என்றும், அங்ஙனே திரண்டு கூறுகிறதென்றும், அதனைப் புரட்டி நான்காம் வருணத்தார் என்று அச்சிட்ட

# நாவலர் பணிபுரிந்த சதாவதானி நா. க.

னர் ஆறுமுக நாவலர் என்றும் கூறும் வருண சிந்தாமணி விடயமாகப் பலப் பல விவாத சபைகள் சேர்ந்தன; அவை யிற்றில், காலமெல்லாம் காமனைக் காய்ந்து சோமசுந்தரனைச் சேர்ந்த சுந்தராம் ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுக நாவலர் பெருமானை இகழ்ந்தனர். உண்மை உணரார். அவ் வசை வாசகங்களைக் கேட்ட அவர் மாணவரின் மாணவராய அருந்தவப் பெருந்தகையார் அங்கயற் கண்ணம்மை மன்றல் மண்டபத்தில், வட மொழியிலும், தென் மொழியிலும், பிற மொழிகளினும் வல்ல சங்கப் புலவர்கள் ஏங்க "வேளாளர் நான்காம் வருணத்தவரே" என்று சுமார் ஆறுமணி காலம் உபந்நியாசித்து, வைகறை எழுந்து வையையில் மூழ்கி, அங்கயற் கண் நங்கையையும் அங்க முறை வணங்கிச் சென்னை சேர்ந்தனர்" என்று திரு. வி. க கூறுகின்றார்.

கதிரைவேலர் பல வேறு வகையில் பணி புரிந்துள்ளார். அவர் பணிகள் நாவலரை அடியொற்றிச் செல்கின்றன. மடாலயங்களிலும், ஆதீனங்களிலும் முடங்கிக் கிடந்த சைவ, தமிழ் நூல்களை வெளியே கொண்டு வந்து, அச்சுப் பதிப்புச் செய்து, பொதுமக்கள் கையில் பரவ விட்டமை நாவலரால் தொடக்கப்பட்ட புரட்சி. கதிரைவேலரும் இதைச் செய்தார். நூல்களை அச்சேற்றும் அதே வேளையில் அவற்றிற்கு உரை எழுதும் பொறுப்பும் சேர்ந்தது. உரை அற்ற நூல்கள் பொது மக்களுக்குப் பயன்படா. எனவே நூல்களின் அச்சுப

——— ஆ. தேவராசன்

பதிப்பும் உரை வள வளர்ச்சியும் சமகாலத்தனவாய்-இணைந்த வளர்ச்சியாய் அமைந்திருப்பதைக் காண முடிகிறது. கூர்மபுராண விரிவுரை, பிரபுலிங்கலீலை அரும்பதவுரை, பழனித்தல புராணவுரை, ஏகாதசிப் புராணவுரை, திருவருணைக் கலம்பக உரை, சிவராத்திரி புராணவுரை, கதிர்காமக் கலம்பகவுரை முதலான அரிய உரைகளை எழுதி வெளியிட்டார்.

புலவர்க்கு ஔடதமான நைடதத்திற்கும் நல்லதோர் உரை செய்து கற்றோர் ஏத்தும் வகையில் கண்ணியமாய் வழங்கினார். இதேபோல சுப்பிரமணிய பராக்கிரமம் என்றொரு நூலை இயற்றி, அதற்கு அரிய உரையையும் செய்து கந்தபுராண கலாசாரத்தின் தொடர் வளர்ச்சிக்கு அணி செய்தார். கருலூர் மான்மியம் என்ற ஒரு நூலையும் இயற்றி, உரையும் செய்து வெளியிட்டார்.

—7-ஆம் பக்கம் பார்க்க

# இது தர்மம் தானே?

● வளவாய் ரஞ்சன்

தெருவெங்கும் மரணத்தின்
திறன்கள் தோற்றுப்;
திருவளர் பொதுமக்கள்
தெருவில் வீழ்வார்!
ஒரு நாளா இரு நாளா
இல்லை இங்கே,
விரைவாக தமிழ் தந்த
உயிர்கள் போகுது!

பெண்ணுக்கும் குழந்தைக்கும்
பெரியோர், ஊனர்
அண்ணன்மார் தம்பிக்கும்
அதுவே சாவு!
கண்ணின்றித் தான் யாரோ
கடமை என்றே
மண் மீதில் நமைக் கொல்லும்
கொடுமை செய்வார்!

தப்பேதும் செய்யாத
தமிழன் தானும்,
அப்பாவிக் குடிமகனும்
அநீதிக் காரன்;
எப்போதும் பயத்தாலே
இதயம் துள்ளும்
அப்பப்பா! அநியாயம்
யாரை நோவோம்?

வீட்டுக்குள் இருந்திடவும்
விழிகள் ஏங்குப!
காட்டுக்குள் பயங்கரமாய்
கனவும் தோன்று!
நாட்டுக்குள் வாழ்வதுவா?
நல்லாய்ச் சொல்வீர்!
வேட்டுக்கள் நம் மீதா
வீரம் பேசும்?

சுத்தமத தத்துவங்கள்,
புரட்சி எல்லாம்
செத்து விடத் தானோ இச்
செய்கை இங்கே
எத்தனை நாள் இக்கொடுமை?
இனியும் என்றால்
சத்தியநற் தாமீக
சமூகம் எங்கே?

தீக்கோலை மேனிக்குள்
திணித்து வேட்டின்
நாக்குக்கள் நம் உயிரை
குடிப்ப தென்றால்
ஏக்கங்களை நம்மவர்கள்
எவர்க்கும் வந்தே
தாக்கங்கள் தந்தாலும்
தர்மம் தானே?

# சோயா

## சீனத்து இலக்கியங்களில் தனி இடம் பெற்ற பண்டம்

சாதாரணமான ஒரு சோயா விதையைக் கைகளில் எடுத்து உற்று நோக்கினால் அதிலே எந்த வகையான புதுமையையும் காண முடியாது. ஒரு சிறிய உருண்டை வடிவான பழுப்பு நிற விதையினுள்ளேயும் கூட என்னதான் புதுமையாக இருக்க இயலும்.

உண்மையில் அது புதுமை வாய்ந்ததே. நாங்கள் தாம் அதனைக் குறித்து அலட்சியமாகவும் ஆறுதலாகவும் இருந்துள்ளோம். அதனை ஆராயுந்தோறும் அளவிறந்த புதுமைகளை அது தன்னுள்ளே அடக்கி வைத்து உள்ளதை அறிவியலாளர் கண்டறிந்தனர்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் ஐக்கிய அமெரிக்க நாடுகளிலும் கூட சோயா என்றால் என்னவென்று தெரியாமல்தான் இருந்தது. ஆனால் 1966ம் ஆண்டின் பின் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் மூன்றாவது பணப்பயிருக்கான இடத்தை அது பிடித்துக் கொண்டது.

என்ன அதிசயம் நடந்தது? அதன் ஐந்திலொரு பாகம் எண்ணெய். ஐந்தில் இரண்டு பாகம் புரதம் ஆகும். உலகின் உணவுக்கான எண்ணெயும் புரதமும் தேவைகள் இன்னமும் பூர்த்தியாக்கப்படவில்லையே,

**பால. சண்முகநாதன்**

சோயாவின் வெற்றிக்கு வேறும் இரண்டு காரணிகள். சோயா பயிரிடும் விவசாயிக்கு நட்டமே இல்லை. ஆண்டு தோறும் புதிய உபயோகங்கள் கண்டு பிடிக்கப்படுகின்றன.

சீன இலக்கியங்களின் பிரகாரம் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே சோயா சீனாவில் பயிரிடப்பட்டு வந்துள்ளது. சீனாவிலிருந்தே சோயா பிற நாடுகளுக்கு கொண்டு செல்லப்பட்டது.

அமெரிக்காவில் வில்லியம் ஜே. மோர்ஸ் என்பவர் சோயாவின் பெருமைகளைக் கண்டறிந்து அதனைப் பிரசாரம் செய்ய ஆரம்பித்தார். பயிரிட்ட விவசாயிகளும் அனுபவத்தால் அதன் நன்மைகளைக் கண்டறிந்தனர். சோயாவிதையும் தாவரமும் அதிசிறந்த கால்நடை உணவாகவே ஆரம்பத்தில் உபயோகப் படுத்தப் பட்டன. மேலும் சோயாவினால் நிலத்துக்கும் நைதரசன் வளம் கிடைத்தது.

அடுத்தபடியாக சில கைத்தொழில் முயற்சியாளர் சோயாவிலுள்ள எண்ணெய்யை மட்டும் பிரித்தெடுத்து மிகுதியைக் கால்நடை உணவாக விற்பனை செய்தனர், அப்பொழுதும் கூட சோயா பயிரிடுவதில் அபிவிருத்தி காணப்படுவதாயில்லை.

சோயா அறுவடைக்கான இயந்திரங்கள் கண்டு பிடிக்கப்பட்டவுடன் சோயா அறுவடை விகிதம் ஆண்டு தோறும் அதிகரிக்க ஆரம்பித்தது.

பயிரிடப்படும் ஏக்கரளவும் உற்பத்தியாகும் புசல் அளவும் மேலும் அதிகரிக்கலாயின. உற்பத்தியாகும் சோயா விதைகள் அனைத்துக்கும் என்ன நடக்கின்றது? அனைத்துமே உண்ணப்படுவன. ஆனால் நேரடியாக உண்பதும் மறைமுகமாக மாறுபட்ட பண்டங்களின் உருவிலேயே அதிகமாக உண்ணப்படுகின்றன. பல தடவைகள் உருவம் மாறுவதும் உணவல்லாத வகையிலும் கூட உபயோகப்படுகின்றன.

பண்ணைகளிலிருந்து சேகரிக்கப்படும் சோயா விதைகள் துப்புரவு செய்யப்பட்டு உலர்ந்த பின்னர் உயரமான கட்டிடங்களில் பாதுகாக்கப் படுகின்றன. சோயாவைப் பதனிடுவதில் பல நிறுவனங்கள் முன்னிற்கின்றன. அனைத்து நிறுவனங்களும் ஒரே வகை முறையையே பாவிக்கின்றன. முன்னர் இயந்திரங்கள் வயிலாக எண்ணெய் பிழிந்து எடுக்கப்பட்டது இப்பொழுது இரசாயனப்பகுப்பு முறை பாவிக்கப்படுகின்றது. எண்ணெய் எடுத்த சோயாப் பிண்ணாக்கு புரதச்சத்து உணவாகக் கால்நடைகளுக்குப் பயன்படுகின்றது. கோதுகள் கூட உணவாக பயன்படுகின்றன. சாதாரணமாக அறுபது இறாத்தல் விதையிலிருந்து பதினொரு இறாத்தல் எண்ணெய்யும் நாற்பத்தேழு இறாத்தல் பிண்ணாக்கும் கிடைக்கும்.

பால், முட்டை, இறைச்சி ஆதியன சோயாப்பிண்ணாக்கைச் சாப்பிட்ட பிராணிகளிலிருந்தே பெறப்படுகின்றன.

ஐக்கிய அமெரிக்க நாட்டு உற்பத்தியில் அரைப்பங்கு விதையாகவோ, பிண்ணாக்காகவோ எண்ணெய்யாகவோ ஏற்றுமதியாகின்றது. புரதத்துக்கும், எண்ணெய்க்கும் உலகம் எங்கணும் அபரிமிதமான தேவையுள்ளது.

உற்பத்தியாளரும் பதனிடுவோரும் பங்கு கொள்ளும் சோயா அவரைச் சங்கமானது வெளிநாடுகளில் சோயாவின் பெருமையை விளக்கியுள்ளது. சோயா எண்ணெய் உணவுத் தயாரிப்பிலும் மற்றும் பல கைத்தொழில் முயற்சிகளிலும் மிகுதியாகப் பயன்படுத்தப்படுகிறது.

ஒட்டுப் பலகைத் தயாரிப்பில பயன்படும் பசை சோயாவிலிருந்தே தயாராகின்றது. சோயா மா மனிதர்களுக்கு உணவாகப் பயன் தருகின்றது. சோயா விதைகள், பசைகள், பூச்சுகள், சவர்க்காரம், ஆகியவை தயாரிப்பிலும் பயன் பெறுகின்றது.

சோயா விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதமாக விளங்குகின்றது. சோயாவின் பெருமை சொல்லி முடியாது.

---

உள ஈரம்...

—4-ஆம் பக்கத் தொடர்

அந்தத் தோட்டத்து அழகிக்குத்தான் பிரியாவிடை சொல்ல முக்கியமாக எல்லோரும் விரும்பினர்.

பொழுதாகிவிட்டது.

மறுபடியும் வரவேற்றல்! டியூட்டிமாறல்! மறுபடியும் சீட்டாடல்!

மறுநாளும் வந்து விட்டது?

காலையோடு அப்பதியையச் சூழ சுமார் மூன்று மைல் சுற்றுவட்டத்துக்குள் உள்ள நிலச் சொந்தக்கார விவசாயப் புள்ளிகள் சிலர் வந்து சேர்ந்தனர்.

அவர்கள் தனியாக வரவில்லை; சுற்றஞ்சூழ வந்திருந்தனர்.

அவர்களுடன் பச்சை உணவு வகைகளும் வந்து சேர்ந்தன.

இன்று உணவுப் பொறுப்பெல்லாம் அவர்களுடையது.

சமையல் தொடங்கி விட்டது.

அந்தச் சமையலில் அகதிப் பெண்களும் தொட்டாட்டு வேலைகளில் கலந்து கொண்டனர்.

அந்தச் சமையல் இடைவேளையில் கமக்காரப்புள்ளிகள் இலமட்டங்களைக் கூட்டம் கூட்டி வைத்து எதைப்பற்றி எல்லாமோ பேசிக்கொண்டிருந்தனர். அவர்கள் பேச்சுக்களில் அடுக்கடி தமிழ் பற்றிய பிரயோகங்கள் வந்து வந்து போயின.

மத்திய உணவு தயாராகி விட்டது. அதன் பின்பு சபை இருத்தல் தொடங்கி முடிய மத்தியானந் திரும்பி விட்டது.

மாலையாகி இருளாகி விட்ட பின்பும் குடும்பத்தவர்களை வீடுகளுக்கு அனுப்பிவைத்து விட்டு சில கமக்காரப்புள்ளிகள் அங்கேயே தங்கிவிட்டனர். அவர்கள் தங்களுக்குள்ளேயே ஒரு உடன்பாட்டுக்கு வந்து விட்டவர்களைப் போன்று உடல் உரங்கொண்ட நான்கைந்து, நாலைந்து பேர்களாக தனித்தனியே கூட்டங்கூட்டமாக வைத்துப்பேசிக் கொண்டனர்.

ஒரு புறத்தே லாம்பு வெளிச்சத்தில் வழமையான சீட்டாடல்!

மறுபுறத்தே கூட்டம் கூட்டமான சம்பாஷணை

அகதிகள் மிகவும் உற்சாகத்தோடு இச்சம்பாஷணைகளில் பங்கெடுத்துக் கொண்டனர்.

அவர்கள் எல்லோருக்குமே வேலைவெட்டி தருவதாக ஒவ்வொரு விவசாயப்புள்ளிகளும் தனித்தனியே வாக்குறுதிகளை அளித்தனர்.

காலக்கிரமத்தில் தலைக்கு ஒவ்வொரு ஏக்கர் காடு வெட்டித் தங்கள் பொறுப்பிலேயே கயிஞ்செய்ய ஒத்தாசை தருவதாகவும் வாக்குறுதி அளித்தனர்.

✻

நாட்கள் பத்துக்கு மேல் ஆகிவிட்டன.

வகுப்புக்கலவரம் பரிபூரணமாக அடக்கப்பட்டுவிட்டதாக வானொலிச் செய்திகளும், பத்திரிகை அறிக்கைகளும் கூறின.

செய்திகள் வெளிவந்த சூட்டோடு சூடாக அகதிகள் முகாமுக்கு வருவோர் போவோரும் எண்ணிக்கையில் அதிகரித்தே வந்தனர். அதனுடன் அகதிகளுக்கான உபசார உபசரணைகளும் அதிகரித்தே வந்தன.

நாற்பது மைல்களுக்கப்பால் உள்ள பட்டணத்தைச் சேர்ந்த புள்ளிகள் நான் நீ என்று ஒருவரை ஒருவர் முந்திக் கொண்டு உடுதுணி, சீப்புக் கண்ணாடி, வாசனை எண்ணெய், பவுடர், கண்ணாடி வளையல்கள் என்று விதங்களில் தானகாரியங்களில் ஈடுபட்டனர்.

முகாமில் இருந்தவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி காணத் தொடங்கிவிட்டது.

முதலில் ஐந்து வயதுக்கும் பதினைந்து வயதுக்குமிடையில் உள்ள சிறுவர் சிறுமியர் தொகையில் வீழ்ச்சி.

பதினைந்துக்கும் முப்பதுக்கும் இடையிலான குமரன் குமரிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி.

முப்பதுக்கும் ஐம்பதுக்குமிடையிலான வயதுடையோரிடையே வீழ்ச்சி?

மூடப்பட்ட பாடசாலை மறுபடியும் திறக்கப்பட்டபோது மிஞ்சிக்கிடந்த ஜீவன்களைப் பாடசாலை முகாமையாளர்கள் வெளியேற்றிவிட்டனர்.

பதினைந்து இருபது நாட்களுக்குப் பிறகு அந்தக் கூட்டம், நகரப்பகுதியில் சிறுசிறு கூட்டங்களாகப் பிரிந்து பிச்சாபாத்திரங்களை ஏந்திக் கொண்டு திரிந்தது.

ஒரு கூட்டத்தைத் தாண்டி கைகளை அகல வீசிக்கொண்டு ஒரு அம்மாள் போய்க்கொண்டிருந்தாள்.

அவள் அந்த அகதிகள் முகாமில் முதல முதலில் உணவு சமைத்து அன்னதானம் வழங்க வந்த பெண்கள் கூட்டத்துக்குத் தலைமை தாங்கிய நடுவயதுக்கார அம்மாள்!

இப்போது அவள் சற்று நாகரீக உடைக்குள் இருந்தாள்; பச்சை நிறத் தேவதையாக இருந்தாள்.

தலையிலே ஒருசுமை; வ..க் கப் ... பஞ்சு நிறைந்த ஒரு பிரம்புக் கூடை சகிதமாகத் அந்த அம்மாளுக்குப் பின்னால நடந்துகொண்டிருந்தாள் ஒரு சுமைதாங்கி!

அவள் பச்சை, மஞ்சள், வெள்ளை ஆகிய நிறங்கள் கலந்து பொருத்தப்பட்ட மேல்சட்டையும், கீழ்ப்பாவாடையும் அணிந்திருந்தாள்.

அவளின் நீளச் சடை கட்டையாக வெட்டப்பட்டிருக்க வேண்டும். முதுகில மட்டும் மூடிக்கொள்ளும் வரையில தான் அது தொங்கியது! அதன் தலைப்பில ஒரு கறுப்பு நூல் கட்டப்பட்டிருந்தது.

அவளை அந்தச் சிறு கூட்டத்தினர் அடையாளம் கண்டு விட்டனர்.

அவள் அந்த முகாமில் இருந்த தோட்டக்காட்டு அழகுராணி.

அந்தக் கூட்டத்தில் வந்த ஒருத்திக்கு மருமகள் முறையானவள்.

இவளையும் அவள் அடையாளம் கண்டு விட்டாள்.

"அதுதே எப்பிடி அத்தை இருக்கறீங்க?"

அழகுராணி இவளைப் பார்த்துக் குசலம் விசாரித்தாள்.

அவளுக்கு என்ன தெரியும்! அவள் இளசுதானே!

அவளின் அத்தைக்காரி வாய் திறக்கவில்லை.

அதற்கிடையில் முன்னே போன அம்மாள்—அழகுராணியின் எஜமானி வாய் திறந்து விட்டாள்.

"ஷட் அப் யுவர் மவுத்! வாடி மகதுயாய்!" என்று அம்மாளின் திறந்த வாய்க்குள்ளிருந்து சொற்கள் வந்தன.

அழகுராணி வெருண்டடித்துக்கொண்டு அவளுக்குப் பின்னால ஓடினாள்.

அவளின் அத்தைக்காரி பிச்சாபாத்திரத்துடன் அவளையே பார்த்துக்கொண்டு ஏங்கிப்போய் நின்றாள்.

விக்கி வந்த கரங்களை விசுக்கியபடியே அந்த அம்மாள் அவசர அவசரமாக அசைய அழகுராணி ஓட்டமும் நடையுமாகவே இன்னும் அவள் பின்னால் சென்றுகொண்டிருக்கிறாள்!

அம்மாள் பேசிய ஆங்கில வார்த்தையின் தாக்கம் அவளுக்கு விளங்கியதோ இல்லையோ ஆனால் அவளின் சீற்றம் இவளுக்கு விளங்கியிருக்க வேண்டும்!

(முற்றும்)

சென்னையில் கூடிய தமிழறிஞர்கள் முடிவு

# இரண்டாம் தர பிரஜையாக தமிழ் மக்கள் வாழ முடியாது

இலங்கை அரசாங்கமும் இத்தீவிலுள்ள அரசியல் கட்சிகளும் உடனடியாக ஒருங்கிணைதல் வேண்டும். இணைந்து, சமாதானம், நீதி என்பவற்றை உறுதிப்படுத்தும் ஒரு தீர்வு காணும்பொருட்டு, முழுமூச்சாக, மனம்வைத்து முயலுதலும் வேண்டும். இவ்வாறு முன்னைநாள் யூனியன் அமைச்சர், திரு சி. சுப்பிரமணியமும் தமிழ் நாட்டுப் பிரமுகர்கள் பதினறு பேரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

உறுதியாகவும் உடனடியாகவும் கையாளப்பட்டாலன்றி, இந்த இன மோதல், இலங்கைத் தீவினது ஜனநாயகத்தையும் நாகரீக வாழ்வையும் மட்டுமல்லாது, அயல நாடுகளிலும் இவற்றை அழித்துவிடும். இவ்வாறு எச்சரித்துள்ள அவர்கள், பிரச்சனையின் தீர்வுபற்றியும் கருத்துத் தெரிவித்துள்ளனர். அரசியல் தீர்வுதான நியாயபூர்வமானதும நீடித்து நிலை நிற்கவல்லதுமாகும். அது வடக்கு, கிழக்கு மாவட்டங்களில் பரந்தளவு சுயாட்சியை உறுதி செய்வதாகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் இலங்கைப் பிரஜைகள் எல்லோருக்கும் சம உரிமைகளும் சம வாய்ப்புகளும் வழங்கப்படுதல் வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இந்த உருக்கமான கோரிக்கையில கைச்சாத்து இட்டுள்ளபலர், நீதிமன்றங்கள், பாராளுமன்றம், ஐ. நா. தாபனம் ஆகியவற்றில முன்னர் உயர் பதவி வகித்தோராவர், யுனெஸ்கோவின் முன்னைநாள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் மலகம் ஆதிசேஷையா, சென்னை உயர் நீதிமன்ற முன்னாள் பிரதம நீதிபதி திரு. எம். எம். இஸ்மாயில், சுப்றீம் நீதிமன்ற முன்னைநாள் நீதிபதி திரு. பி. எஸ். கைலாசம், தமிழ் நாடு முன்னைநாள் முதலமைச்சர் திரு. எம. பக்தவத்சலம், தமிழ் நாடு மேல சபைத் தலைவர் திரு. எம். பி. சிவஞானம் ஆகியோர் இக் குழுவில இடம் பெறுகின்றனர்.

இனி உருக்கமான இவ் வேண்டுகோள் எடுத்துரைப்பனவற்றைக் கவனிப்போம்:

'இலங்கையில் தமிழர் பிரச்சினையையிட்டு எண்ணற்ற இலங்கைப் பிரஜைகள் விடுத்துள்ள வேண்டுகோளை, இந்தியப் பிரஜைகளாகிய இதன் கீழ் கையொப்பம் இட்டுள்ள நாம், முழு மனதார ஆமோதிக்கிறோம். அவர்கள் சமாதானமான, நீதியான ஒரு தீர்வினை விரும்பிநிற்கின்றனர். நாம் ஆதரிப்பதும் அதனையே.

சம்பந்தப்பட்ட இரு சாராருக்குமிடையே உரையாடலும் இணக்கப் பேச்சு வார்த்தைகளும் நிகழ்த்தப்பெறுவதன் மூலமே, இப்பிரச்சினைக்குத் தீர்வுகாணலாம். வன்முறைவாதமும் விளைவுமாக தீவிரவாதிகளின் வன்செயலும் அரசின் வன்செயலும், மாறி மாறி, ஒரு தீய சுழலாகத் தற்போது இடம்பெற்று வருகின்றன. இவ் வன்செயற் சுழற்சி உடனேயே நிறுத்தப்படல் வேண்டும். பரஸ்பரம் ஒருவரை ஒருவர் கனம் பண்ணும், புரிந்துணர்வு நிலவும் ஒரு புதிய சூழலில், அனைத்துக் கட்சிகள் மகாநாடு கூட்டப்பெற்று உரையாடல்கள் மீளவும் தொடர்ந்து நடத்தப்படுதல் வேண்டும். சக்கரவர்த்தி அசோகனதும் மகாத்மா காந்தியினதும் ஆத்ம சக்தி மாத்திரமல்லாது. ஆன்மீக அதிகாரம் உலோகாயுத ஆற்றலை விஞ்சியது எனும் தத்துவமும், எல்லாக் கட்சிகளுக்கும் நெறிகாட்டியாக அமைதல் வேண்டும்.

வன்செயலை உடனடியாகக் கைவிடும் வண்ணம் இதிற் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் நாம் இந்த உருக்கமான வேண்டுகோளை விடுக்கிறோம். வன்செயலும் இராணுவ நடவடிக்கையும் ஒரு நிரந்தர தீர்வுக்கு என்றுமே இட்டுச் செல்லப் போவதில்லை. வெறுப்பினால் வெறுப்பை வெல்ல இயலாது. இறுதியாகப்பார்க்கப்போனால், சிங்களவர்களும் தமிழர்களும், ஆதியில், இந்தியாவிலிருந்து வந்த இந்திய வம்சா வழியினரே. மானிடராகப் பிறந்த எல்லோரையும் ஒருங்கு இணைக்கும் பொதுத் தர்மம்தான் இவர்கள் இருவர் மீதும் ஆட்சி செலுத்துகிறது. பெரும்பான்மையினரான சிங்களவர்களும் சிறுபான்மையினரான தமிழர்களும் ஒத்திசைந்து வாழ வேண்டும். அது சாத்தியமாகும்; அவசியமுமாகும்.

## வடக்கு, கிழக்கு மாவட்டம் இணைந்த சுயாட்சி வேண்டும்

இலங்கையிலுள்ள அரசாங்கமும் அரசியற் கட்சிகளும் உடனடியாக ஒன்றுசேர்ந்து உழைத்தல் வேண்டும். அவ்வாறு முழுமனதார உழைத்து, இணக்க உரையாடல்கள் வாயிலாக சமாதானமும், நீதியும் வாய்ந்த தீர்வு காண்பது அத்தியாவசியமாகும். உறுதியாகவும் உடனடியாகவும் இம் மோதல் கையாளப்படாவிட்டால் இத்தீவிலும் அயல் நாடுகளிலும் ஜனநாயகத்தையும் நாகரீக வாழ்வையும் அது அழித்துவிடும். பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடர்வதற்கு உகந்த ஒரு நிலைமையை உண்டாக்கு முகமாக, இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில சிங்களவர்களைக் குடியமர்த்தும் எத்தனத்தைக் கைவிடுமாறு எமது மனப்பூர்வமான இவ் வேண்டுகோளை

—8ம் பக்கம் பார்க்க

# காலத்தை வென்ற கலைஞன் "டிங்கிரி"



காலத்தால் அழிக்க முடியாத பேறைப் பெற்றவர்கள் கலைஞர்கள் அந்த வரிசையில் எம் நினைவைவிட்டு அகல முடியாமல் எம்முள்ளத்தில் வாழ்ந்து கொண்டிருப்பவர் மறைந்த நகைச்சுவை நடிகர் டிங்கிரி கனகரெத்தினம். அமைதி தவழ்ந்த அன்றைய இலங்கை மண்ணில், தமிழர் வாழும் பகுதிகளிலெல்லாம் தன் நகைச்சுவை நிகழ்ச்சியின் மூலம் லட்சோப லட்சம் இதயங்களை மகிழவைத்த அம் மாபெரும் கலைஞர் இப்போது நம்மிடமில்லை.

சிரி, அத்துடன் சிந்தனை செய்யவும் மறந்து விடாதே என்ற தத்துவத்துடன் சீரிய கருத்துக்களை நகைச்சுவை மூலம அள்ளித் தந்த கலைவாணர் என். எஸ் கிருஷ்ணன் அவர்களின் வழியிலே எம்மையெல்லாம் சிரிக்க, சிந்திக்க வைத்து அரும் பணியாற்றிய டிங்கிரியவர்களை இழந்து நான்கு வருடங்கள் முழுமையாக கடந்து விட்டன.

கலைவிழாக்கள், நடன அரங்கேற்றங்கள், இயல், இசை, நாடகங்கள் இவ்வண்ணம் திரும்பும் திசையெல்லாம் உன்னத மகிழ்ச்சிப் பிரவாகமே கரைகடந்து போயிருந்த அன்றைய காலம் 22-03-81 பகலவன மக்களின் பூரிப்பான முகங்களை தரிசித்தவண்ணம் தன் பயணத்தை முடித்துக்கொள்ள, மாலை மலாகிறது டிங்கிரியவர்களும் தன் சகாவான சிவகுரு அவர்களுடன் மக்களை மகிழ்விக்க மேடையேறுகிறார். மக்கள மத்தியிலே ஆரவாரம்! தலைக்கு மேல் முகப்பட்ட மதிப்பு அளவுடன் நிகழ்ச்சியை முடித்துக்கொள்ள தயாராகிறார்! அப்போது மேடை நிர்வாகி அடுத்த நிகழ்ச்சியின் தாமதத்தை டிங்கரிக்கு தெரிவிக்க அவரும் மேலும் தன் நிகழ்ச்சியை விரிவுபடுத்துகிறார். (இடத்துக்கேற்றவாறு நிகழ்ச்சியை மாற்றியமைக்கவும், கூட்டவோ குறைக்கவோ டிங்கிரிக்கு நிகர் டிங்கிரியே)

அந்தவேளையில்தான் காலன் தன் பராக்கிரமத்தை பலநூறு மக்கள் மத்தியிலேயே டிங்கிரி மீது பிரயோகிக்கிறான். எந்த மேடைமீதேறி மக்கள் மனதை கொள்ளை கொண்டாரோ அந்த மேடையிலே அந்த மக்கள் முன்னிலையிலேயே தன் நெடும பயணத்தை தொடங்கிய அந்தக் கலைஞர், நாடக உலகத்துடன் நிற்காமல் இலங்கை இந்தியக் கூட்டுத் தயாரிப்பான 'இரத்தத்தின் ரத்தமே', உள்ளூர் தயாரிப்பான வாடைக்காற்று, தெய்வம தந்த வீடு போன்ற திரைப்படங்களிலும் தன் நடிப்பாற்றலை வெளிப்படுத்துப் பலரின பாராட்டைப் பெற்றார்.

மகிழ்ச்சி ததும்பிய அந்த நாளை நினைத்து ஏங்கும் இதயத்துடன சகல நியமங்களையும் இழந்து நிர்க்கதியாய் நிற்கும நாம மேற்படி கலைஞரையும் மறைந்துவிட்ட நியமங்களுடன நினைவுகூருவது சாலச் சிறந்ததே.

❋ யாழூர் துரை

## இணையற்ற...

—5-ஆம பக்கத் தொடர்

யும் 1929 இல் அச்சுக்கூடத்தையும 1930 இல ஈழகேசரியையும தொடங்கிய திரு பொன்னையா அவர்கள உருவேரங்கு சிறிய விதைதனில் பெரிய மரமாகி—பயன மரமாகி—பூத்துக் காய்த்துப் பழங்களைத் தந்தார். ஆத்திசூடியில தொடங்கி தொல்காப்பியம் எழுத்து, சொல, பொருள் அலங்காரங்களை கணேசையர் உரைக் குறிப்புடன வெளியிடுவது வரை, பாடப்புத்தகங்களாக, சமய நூல்களாக, அறிவுப் பொக்கிஷங்களாக 1930-50 காலப்பகுதியில நூறு புத்தகங்களுக்கு மேலாக வெளியிட்டுப் பணிபுரிந்துள்ளார்.

### சன்மார்க்க சபை

ஈழகேசரி பொன்னையா அவர்களின பெருந் தொண்டுகளில் மூன்று தொண்டுகள் முக்கியமானவை. முதலாவது ஈழகேசரிப் பத்திரிகை. இரண்டாவது தொல்காப்பியப் பதிப்பு போன்ற நல்ல தமிழ் நூல் வெளியீடுகள். மூன்றாவது குரும்பசிட்டி சன்மார்க்க சபை தமிழுக்குப் பொதுவாகவும, ஈழத்துக்குச் சிறப்பாகவும், தாம் பிறந்த குரும்பசிட்டிக்கு மேலாயாகவும செய்த தொண்டுசெய்தமையாலே திரு. பொன்னையா அவர்கள இலங்கை முழுவதும பேசப்படுகிறார். குரும்பசிட்டி சன்மார்க்க சபையால் போற்றப்படுகிறார். சன்மார்க்க சபை மாணிக்கவாசக நூலநிலையம், வாசிகசாலை என்பவற்றை நடத்தியது ஈழகேசரிக்கு மாற்றுப்பத்திரிகையாக வந்த எல்லாப்பத்திரிகைகளையும் பொன்னையா அவர்கள சன்மார்க்கசபை வாசிகசாலைக்குக் கொடுத்துதவினார்கள். மகாத்மாகாந்தி தினம், நாவலர் குருபூசை, சமயகுரவர்கள் குருபூசைத் தினங்கள் விமரிசையாகக் கொண்டாடப்பட்டன. பல அரிய நூல்களை சன்மார்க்கசபை இலவசவெளியீடாக அச்சிட்டு வழங்கியது. கிராமமுன்னேற்றத்துக்கு வேண்டிய எல்லாப்பணிகளிலும் சன்மார்க்க சபை ஈடுபட்டு உழைத்தது.

### விவசாயப் புரட்சி

இரண்டாவது மகாயுத்தம் ஏற்பட்டு உணவுப் பஞ்சம் தலைவிரித்தாடிய காலத்தில வயாவிளானில ஏறக்குறைய 12 ஏக்கர் விஸ்தீரணமுள்ள காணியை விலைக்கு வாங்கி இயந்திர சாதன உதவியுடன பெருமளவில உணவுப் பொருள் விருத்தி செய்து யாழ்ப்பாணத்தில ஒரு விவசாயப் புரட்சியை ஏற்படுத்தினார் பொன்னையா அவர்கள். அவ்விவசாயப் பண்ணை யாழ்ப்பாண விவசாயிகளுக்கும் அரசாங்கப்பகுதிக்கும பல புது அனுபவங்களை உண்டாக்கியது. இந்த காணியில்தான் பொன்னையா அவர்களது பெருமுயற்சியின பயனாக வயாவிளான மத்திய மகாவித்தியாலயம நிறுவப்பட்டது.

### கொடை வள்ளல்

இவரது வள்ளண்மையைப் பல பெரியோர்கள பாராட்டியுள்ளார்கள்:

'திரு பொன்னையாவிடம் நட்புக் கொண்டோர், அவர்கள முன்னிலையில தெரிந்தோ தெரியாமலோ "தேவை" என்று ஒரு சொல்லை உபயோகித்தால் அத்தேவை அடுத்தநாளே பூர்த்தியாகி விடும. சைவாசிரிய கலாசாலைப் புத்தக அலுமாரிகளிலே தொல்காப்பியம முதல சென்னை அகராதி பரியந்தம் தமிழ் நூல்கள ஒரு காலத்தில நிரம்பி நிறைந்து கிடந்தன. இந்த நிறைவு திரு. பொன்னையா அவர்களின முன்னிலையில "தேவை" என்ற சொல்லை உச்சரித்ததன் பெறுபேறு... யாழ்ப்பாணத்திலே தர்ம ஸ்தாபனங்கள் என்று சொல்லப்படுபவைகளுள்ளே பொன்னையா அவர்களின அனுதாபங்களைப் பெறாதவைகள இல்லையென்றே சொல்லலாம்.. இந்தியாவிலேயும பல தர்மங்களுக்கு ஆயிரக் கணக்கில வழங்கியிருக்கிறார்கள." (பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை)

'செல்வத்தைப் பெற்ற பயன் ஈதலென்பதனைத் தெளிந்து நின்றோன்" (வித்துவசிரோமணி கணேசையா)

### மறைவு

துணிவே துணையென்று வாழ்ந்தவரும ஈழகேசரி தமிழ் வாரப்பத்திரிகையையும "கேசரி" ஆங்கில வாரப்பத்திரிகையையும் நடத்தியவரும் நூலவெளியீட்டாளரும், சமூக சேவகருமான ஈழகேசரிப் பொன்னையா அவர்கள் 30-3-51 இல் இவ்வுலகை விட்டு அமரரானார்.

## நாவலர்...

—5-ஆம பக்கத் தொடர்

அக்காலத்தில ஒப்பாரும் மிக்காரும் இல்லாதிருந்த நா. கதிரவேற்பிள்ளையை எல்லோரும் அணுகி ஓர் அகராதி இயற்றித் தருமபடி வற்புறுத்தினர். அதற்கிணங்க கதிரவேற்பிள்ளை அவர்களும ஓர் அகராதியினை இயற்றி "தமிழ்ப் பேரகராதி" என்ற பெயரில் வெளியிட்டார். சென்னை லெக்சிகன பதிப்பாசிரியராக இருந்த காலஞ்சென்ற பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள் இந்த அகராதி முற்பட்ட அகராதிக்கெல்லாம் விதிவிலக்காக நல்ல முறையில் அமைந்திருந்ததாக பாராட்டியுள்ளார்.

பலவேறு வழிகளிலே புகழ் பெற்ற அவர் திருமுறை விழாவினையும தமிழ் நாட்டில் நடாத்திப் புகழ் பெற்றார். அபநாயச் சோழ மகாராசன காலத்துக்குப் பின்னர் கதிரைவேலரே அத்தகைய ஒரு திருமுறை விழாவினை நடத்தினார் என்று எல்லோரும் பாராட்டினர். அவரை யானையில ஏற்றி வீதிகளில் ஊர்வலமாக அழைத்துச் சென்று பாராட்டினர்.

அதற்குப பின்னர் புகழ் பூத்தவராய் ஈழ நாட்டிற்கு வந்து சேர்ந்தார். அவரது சொற்பொழிவுகள் பல இடங்களிலும நடந்தது. நாவலர் பேச்சை நாற்பது ஆண்டுகள் கேளாது, ஏங்கிய ஈழத்து அறிஞர்களும் மக்களும் கதிரைவேலர் பேச்சைக் கேட்டு சாந்தி அடைந்ததாக அறிஞர்களே பாராட்டினர் நாவன்மையிலும, தர்க்க சாத்திர நெறியிலும் நாவலருக்கு பின் நாவலராக அவர் விளங்கினார். அவருக்கு வழங்கப்பட்ட சிறப்புப் பட்டங்கள் மிகப பல.

இவரது பணிகளை அணுகி ஆராயும் போது, நாவலர் செய்த பணிகளை இவர் தொடர்ந்து செய்தார் என்பதும், நாவலர் செய்ய எண்ணிய அகராதிப் பணி போன்ற பணிகளை நிறைவு செய்தார் என்பதும தெளிவாகின்றது. ஆக மொத்தத்தில் பார்க்குமிடத்து நாவலருக்குப பின்னர் பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய பாரம்பரியத்தின் பொதுப் போக்குக்கு இவரது பணிகள் அணிசெய்தன. இதனால் நாவலருக்குப் பின் நாவலராக வாழ்ந்து காட்டிய வரலாற்றுப் பெருமை இவருக்கே உரியது.

ஈழமுரசு

## ஏழாம் வகுப்பு மாணவன் கடத்தப்பட்டு விசாரிக்கப்பட்டார்

(உடுப்பிட்டி)

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் கல்வி பயிலும் ஏழாம் வகுப்பு மாணவன் செல்வன். எஸ் கருணாகரன் என்பவர் பாடசாலைக்குச் சென்ற சமயம் இரு நபர்களால் கடத்திச் செல்லப்பட்டு பனந் தோப்பு ஒன்றில் வைத்து விசாரிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது விசாரணை செய்தவர்கள் விசாரணையின்போது தங்கள் கைகளில் குண்டூசி போன்ற உறையும் முக மூடியுமணிந்திருந்ததாகவும் கூறப்படுகிறது இயக்கங்கள், இயக்க முகாம்கள் பற்றி இவரிடம் விசாரிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது இவரில் எந்த 'விடயமும்' இல்லை எனக் கண்ட அவர்கள் இவரை விட்டுவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது

## திறப்பு விழாவில் ஆணையாளர் பேச்சு:

# மக்களுக்கு அண்மையில் நூலகங்களை கொண்டு செல்வது சிறந்தது

(சுண்டுக்குளி)

''மக்கள் நூலகங்களைத் தேடிச் செல்லும் நிலை தற்போது அருகி வருகின்றது இன்றைய சூழ் நிலையும், பாதுகாப்பின்மையும் இந்த நிலையை ஏற்படுத்தியுள்ளது. தற்போது பொது நூலகம் அமைந்துள்ள இடமும பாதுகாப்பற்றது என்ற உணர்வையே ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாகவே மக்களிடம் நூலகத்தைக் கொண்டு செல்ல வேண்டுமென்று திட்டமிட்டோம்''

இவ்வாறு யாழ். மாநகர ஆணையாளர் திரு சீ வீ கே. சிவஞானம் யாழ் பொதுநூலகத்தின் சுண்டுக்குளிக் கிளை நூலகத்தை யாழ் வை. எம். சீ. ஏ கட்டிடத்தில் நேற்று திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார். யாழ் சென். ஜோன்ஸ் கல்லூரி அதிபர் திரு சி. ஈ ஆனந்தராஜன் யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் வண. பிதா. பிரான்சிஸ் ஜோசப அடிகளார் ஆகியோர் மங்கள விளக்கேற்றி வைத்தனர்.

மாநகர ஆணையாளர் திரு. சிவஞானம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

''பொதுநூலகம் கல்விச்சாலை போன்றது மாணவர்களும், வாசகர்களும் அமைதியோடும் மன ஆறுதலுடனும் படிக்கக் கூடிய சூழ்நிலையில் பொது நூலகங்கள் அமைந்திருக்க வேண்டும். தற்போது பொது நூலகத்திலிருந்து மன அமைதியோடு படிக்கக் கூடிய சூழ் நிலையில்லை. இதனை அடிப்படையாகக் கொண்டே கல்லூரிகளுக்கு அண்மித்தும், மாணவர்கள், வாசகர்களை மையமாகக் கொண்டும் இந் நூலகத்தின் கிளைகளை நிறுவ முடிவு செய்தோம்

தமிழ் மக்களின் பிரதான சொத்துக்கள் கல்வி, அறிவு, ஆற்றல் ஆகியனவாகும் இதனைத் தமிழ் மக்கள் நன்கு சிந்திக்க வேண்டும். எமது முன்னோர் கல்வித் திறமைகளினாலேயே முன்னேற்றம் பெற்று உலகப் புகழ் பெற்று விளங்கினர். இதனாலேயே தமிழினம் மீது பிறா பொறாமைப்படும் நிலை தோன்றியது என்றார்.

பேராசிரியர் கு. நேசையா பெறுமதிமிக்க நூல்களை வழங்கிச் சிறப்புரையாற்றினர். யாழ். வை. எம் சீ ஏ தலைவர் திரு எம் சி. பிரான்சிஸ், சென் ஜோன்ஸ் கல்லூரி அதிபர் திரு. சீ. ஈ. ஆனந்தராஜன், சென் பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் வண. பிதா. பிரான்சிஸ் ஜோசப் அடிகளார், யாழ் மாநகர பிரதம நூலகர் திருமதி நடராஜா ஆகியோரும் பேசினர்.

### டீசல் கொள்ளை

காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து சீமெந்து தொழிற்சாலைக்கு நேற்று கொண்டு செல்லப்பட்ட டீசல் பவுசர் இடையில் வைத்து இனம் தெரியாதவர்களால் எடுத்துச் செல்லப்பட்டது.

### பகிஷ்கரிப்பர்

—1ம் பக்கத் தொடர்

றத்தைப் பகிஷ்கரிப்பதென்று மக்கள் ஐக்கிய முன்னணியும், கம்யூனிஸ்ட் கட்சியும் தீர்மானித்துள்ளன.

### அமெரிக்க ..

—1-ம் பக்கத் தொடர்

சபைகளிலும் நிறைவேற்றப்பட்டது.

அமெரிக்க பிரதிநிதிகள் சபையின் ஆசிய பசிபிக பிரந்திய உபகுழுவின் தலைவர் திரு. சலர்ஸ் இப பீரேரணையை முன்மொழிந்தார். இலங்கை ராணுவத்தின் இனப்படுகொலைக்கும் இங்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ஐ.தே கட்சிக்கு

—1ம் பக்கத் தொடர்

''ஐக்கிய இலங்கை மகாஜன சபா'' ஆகும்

கட்சியின் தலைவராக திரு. சிறிபெரேரா கியூ ஸியும், இணைச் செயலாளர்களாக திருவாளர்கள் ருக்மன் சேனநாயக்கா, காமினி ஈரியகொலல ஆகியோரும், பொருளாளராக டாக்டர். நெவில் பொனுண்டோவும் தெரிவாகினர் செயற்குழுவில் திருவாளர்கள் றிச்சர்ட் உடுகம, மேர்வின் குலரத்தின, ஜூனியர் எம் டி. பண்டா ஆகியோரும் இடம் பெறுகின்றனர்.

கட்சியின் நிர்வாகிகளில் நால்வர் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் எம் பீக்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

### விசேஷ லீவிலுள்ள...,

—1-ஆம் பக்கத் தொடர்

பட்ட சில ஊழியர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.


## பல்கலைக் கழக வெளிவாரி பட்டமாணிப் பரீட்சைகள்

கல்வியாண்டு - 1985

BA- பாடநெறிக்கான புதியபிரிவு ⎫ ஆரம்பம்
G.A.Q பாடநெறிக்கான புதுப் பிரிவு ⎭ 6—4—85

G.C.E A/L பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்களும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும G.A.Q பாட நெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

விசேட அறிவித்தல்: பேராதனைப் பல்கலைக் கழகத்தில் டிப்ளோமாவுக்கு (G A Q) வெளிவாரி மாணவராக பதிவு செய்வதற்கான இறுதித் திகதி: 29-3-85

அதற்கான விண்ணப்பப்படிவங்களை 23-3-85 தொடக்கம் எமது நிறுவனத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

(பதிவுசெய்வதற்கு வங்கியில் பணம் செலுத்துவதற்கான ஒழுங்குகள் செய்து தரப்படும்)

REGISTRAR

ASTAN INSTITUTE

166/1, HOSPITAL ROAD - JAFFNA


## தமிழ் அகதிகளின் பிள்ளைகளது

# கல்வி, உணவு தேவையை ராமகிருஷ்ணமிஷன் ஏற்றது

(இராமேஸ்வரம்)

மண்டபம் முகாமில் தங்கியிருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளின் பிள்ளைகளினது கல்வி, உணவு, உடை ஆகியவற்றுக்கான பராமரிப்புச் செலவு முழுவதையும் இராமகிருஷ்ண மிஷன் பொறுப்பேற்றுள்ளது.

இதுவரை இவர்களது உணவுத் தேவையை மட்டுமே மிஷன் கவனித்துவந்தது. புதிய நடவடிக்கையினால் சுமார் இரண்டாயிரம் பிள்ளைகள் தமது கல்வியைத் தொடரும் வசதியும் ஏற்பட்டுள்ளது.

இத்தவேளை, அறந்தோணம் தொகுதி எம்பியான ஆந்தரா காங்கிரஸைச் சேர்ந்த திரு ஜீவரத்தினம் நேற்று முதலமைச்சர் ர. ஜீவைச் சந்தித்து அகதிகள் தேவை பற்றி எடுத்துக் கூறினார். தனது தொகுதியில் குடியேறியிருக்கும் இலங்கைத் தமிழர்கள் அகதிகளே என்றும், அவர்கள் பயங்கரவாதிகளல்ல என்றும் வலியுறுத்தித் தெரிவித்தார்.

### ஆசிரிய நேர்முகப்

—1ம் பக்கத் தொடர்

ஒவ்வொருவரும் வாக்காளர் இடாப்பின் உறுதிப் படுத்தப்பட்ட பிரதி, கிராம சேவையாளர் சான்றிதழ் ஆகியவைகளைத் தவறாது தம்முடன் நேர்முகப் பரீட்சைக்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

### இரு பெண்கள்...

—1ம் பக்கத் தொடர்

வந்தபோது வாகனங்களில் வந்தவர்களின் துப்பாக்கிச் சூடு அவர்களை தாக்கியதாம்.

படுகாயமடைந்த கொட்டடியைச் சேர்ந்த தம்பையா செல்லத்துரை (47) கண்ணாவளையைச் சேர்ந்த கந்தர் செல்லத்துரை (66) வேலணையைச் சேர்ந்த கந்தையா தேவராஜா (55), மணகும்பானைச் சேர்ந்த கைலாசபிள்ளை கணேசராஜா (45) ஆகியோர் யாழ் ஆஸ்பத்தரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

இது சம்பந்தமாக அரசாங்கம விடுத்த செய்திக் குறிப்பொன்றில், வாகனம் ஒன்று பாலத்தைக் கடந்து செல்லும் போது பொலிசாரால் மறிக்கப்பட்டதாகவும், அதை மீறிச் சென்றதால் பொலிசார் சுட்டதால் ஏழு தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகவும் அவர்களில் நாலவர் டெலோ இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இரண்டாம்தர....

—7ம் பக்கத் தொடர்

இலங்கை அரசிற்கு நாம் விடுக்கிறோம்.

இலங்கையின் ஐக்கியம், ஒருமைப்பாடு பேண அனைவரும் பாடுபடுதல வேண்டும்; அதேவேளை, இரண்டாந்தரப் பிரஜைகள் நிலையில் அடக்கி ஒடுக்கப்பட்டு வாழத் தமிழ் மக்கள் உடன்பட முடியாது, அதற்கு அவர்கள் ஒருப்படப் போவதுமில்லை இதற்கு ஒரேயொரு தீர்வு, அதாவது தர்க்க ரீதியாக ஏற்றுக்கொள்ளப்படத் தகுந்த நிலையான தீர்வு, ஓர் அரசிய அமைப்பு ஆகும். வடக்கு, கிழக்கு மாவட்டங்கள் இரண்டிற்கும் உண்மையான சுயாட்சியையும், இலங்கைப் பிரஜைகள் எல்லோருக்கும் சம உரிமைகளையும் சம வாய்ப்புக்களையும் அந்த அமைப்பு வழங்குவதாகவும் இருக்கும் என நாம் நம்புகிறோம்.

(மார்ச் 16ம் திகதி 'இந்து' பத்திரிகையில் இடம்பெற்ற செய்திக் கட்டுரையின் தமிழாக்கம்)

### ஹற்றன் நாஷனல்

—1 ஆம பக்கத் தொடர்

தலைமையில் இக்கூட்டம் நேற்று மாலை யாழ் வை. எம் சீ. ஏ. மண்டபத்தில் நடைபெற்றது. கொள்ளையால் பாதிக்கப்பட்ட சுமார் அறுபது பேர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

• கொள்ளை நடைபெற்று இரண்டு மாதமாகியும் கூட இது பற்றி எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாததைச் சுட்டிக்காட்டிய தலைவர், 'இனியும் பொறுத்திருப்பதில் பயனில்லை' என்று தெரிவித்த பின்னரே சட்ட நடவடிக்கை பற்றித் தீர்மானிக்கப்பட்டது.

இது விடயமான நடவடிக்கைகளை எடுக்க உபகுழுவொன்றும் அமைக்கப்பட்டது. குழுவின் தலைவராக திரு ஆர். ஜே. குணரத்தினமும், செயலாளராக திரு எஸ். சம்புநாதனும், பொருளாளராக சுனனும் கணேசனும் தெரிவாகினர். மேலும் மூவர் உபகுழுவில் இடம்பெறுவர்,

### பஜனை

நல்லூர் சந்தசுவாமி கோவிலில் தற்போது நாட்டின் அமைதிக்காக நடைபெறும் யாக பூசையில் நல்லூர் பகவான் ஸ்ரீ சத்திய சாயி நிலையத்தினரால் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 7மணி தொடக்கம் நாளை திங்கட்கிழமை அதிகாலை 5மணி வரையும் பஜனை நடத்தப்படும்.

### இறுதிச் சடங்கு

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நாடக தயாரிப்பாளரும், பிரபல கலைஞருமான கே. எம். வாசகரின மரணச் சடங்குகள் இன்று காலை பத்துமணிக்கு ஏழாலை தெற்கிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும.

### ஜே. ஆருடன் ..

—1ம் பக்கத் தொடர்

புதிதாகக் கிளம்பியுள்ள தமிழ்ப் பிரதேசங்களுக்கான சிங்களக் குடியேற்றத்தைத் தடுத்து நிறுத்துவது;

பாக்கு நீரிணையில் இலங்கை இந்தியக் கூட்டு ரோந்து சம்பந்தமான இலங்கை தெரிவித்த ஆலோசனையை ஆராய்வது ஆகிய மூன்று அம்சங்களுமே விரிவாக ஆராயப்படும்.

அமைச்சர்கள் எஸ். தொண்டமான், லலித் அத்துலத்முதலி, ஏ சி எஸ் ஹமீது ஆகியோருடனும் திரு பண்டாரி தனித்தனிப் பேச்சுவார்த்தை நடத்துவார்.

கூட்டணிச் செயலாளர் நாயகம் அ. அமிர்தலிங்கமும் திரு. பண்டாரியுடன் கொழும்பு வரலாமென்று உர்ஜிதமற்ற தகவல்கள் கிடைத்துள்ளன.

### ரூபவாஹினி

—1-ஆம பக்கத் தொடர்

காப்பு படை முகாமுக்கோ அறிவிக்கும்படியும் கேட்கப்பட்டுள்ளது

இவர்களைப் பற்றிய விபரங்களை வெளியிடுபவர்களுக்கு தகுந்த வெகுமதி அளிக்கப்படுவதுடன், வெளியிடுபவர்களின் பெயர் விபரங்கள் அந்தரங்கமாக வைக்கப்படும் எனவும் அரசாங்கம் நேற்று அறிவித்துள்ளது.

குறிப்பிடட இருபது தீவிரவாதிகளின் புகைப்படங்கள் நேற்றிரவு ரூபவாஹினியிலும் காண்பிக்கப்பட்டன

### மட்டக்களப்பு

—1-ஆம் பக்கத்தொடர்

குக் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பொருட்களும், பெரும் தொகை பணமும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

வாழைச்சேனை தபாற்கந்தோரின் நிர்வாகத்தின் கீழுள்ள ஐந்து உபதபாலகங்களுக்கு பஸ ஒன்றில எடுத்துச் செல்லப்பட்ட ஒன்பதாயிரம் ரூபா பணமும், முத்திரைகளும் வழிமறித்துக் கொள்ளையிடப்பட்டன.


## மரண அறிவித்தல்

### வெற்றிவேலு குமாரசாமி

நாவற்குழி வெற்றிவேலு குமாரசாமி (ஊழியர் யாழ்ப்பாணம திருஞானஸ் பட்டயக் கணக்காளர்) காலமானார் இவர் சின்னத்தங்கச்சியின் அன்புக் கணவரும். சிவகுமார், கமலகுமார், சபேஸ்குமார், குமாரிகா ஆகியோரின் அன்புத் தந்தையுமாவர் பொன்னம்பலம், சரஸ்வதி, கலாநிதி, திருஞானசம்பந்தர் (திருஞானஸ், யாழ்ப்பாணம்.) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை (24-3-85) பிற்பகல் (4-00) நாலு மணியளவில் நாவற்குழியில் நடைபெறும்.


''ஈழமுரசு'' சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 24-03-1985 ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.